Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு +II விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P No - 0777286247
(c-2203)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு:2035 கார்த்திகை02 ஆம்நாள் ஹிஜ்ரி1427 ஷவ்வால்04 (17.11.2004) புதன்கிழமை இதழ்:48

### அரசாங்கத்திடமிருந்து ஆக்கபூர்வமான பதில் இல்லை

# அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக

# தலைமை தீர்க்கமான முடிவெடுக்கும்!




## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நோர்வேயூடாக வலியுறுத்திக் கேட்டுக்கொண்டபோதும் - இதுவரை அரசாங்கத்திடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அடுத்த கட்டமாக இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பது தொடர்பாக எமது தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவுகளை எடுக்குமென்று அரசியற்துறை ப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களுடனான கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் மற்றும் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, (12 ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சுக்கு வருவார்களா என்பதை

## இந்த மாதத்தில் புலிகள் அறிவிக்க வேண்டுமாம்!



### காலக்கெடு விதிக்கிறார் சந்திரிகா

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களுக்கு வருகிறார்களா? இல்லையா என்பதை இந்த மாதத்துக்குள் அறிவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சிக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு காலக்கெடு விதித்திருக்கிறார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

அடிக்கடி பல்வேறு காரணங்களை முன்வைக்காமல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான அனைத்தையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. எனவே பேச்சுக்கு வரும் பொறுப்பு விடுதலைப் புலிகளைச் சார்ந்ததாகும்.

பேச்சுக்கு வருவதற்கான விருப்பத்தை அல்லது விருப்பமின்மையை விடுதலைப் புலிகள் இந்த மாதத்தில் அறிவிக்கவேண்டும்.

கடந்த எட்டு மாதங்களாகத் தமிழீழ விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள்.

## திருமலை துறைமுகத்தைச் சூழ புலிகள் முகாம் அமைக்கிறார்கள்!

### அரசாங்கம் மீண்டும் புகார்

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதியில் விடுதலைப்புலிகள் புதிய முகாம்களை அமைத்துவருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மீண்டும் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏற்கனவே திருமலைத் துறைமுகப் பகுதியில் விடுதலைப் புலிகள் புதிய படைமுகாம்களை அமைத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்புக்குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டே இன்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

இன்று பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது - போர்நிறுத்த நடைமுறைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக புறூவ் ஹொவ்டே - தமிழ்ச்செல்வனுடன் ஆராய்வார் எனத் தெரியவருகிறது.

### யாழ் நோக்கிவந்த ஹைஏஸ் வான்மீது

## அநுராதபுரவில் பொலிஸார் சூடு
## கோண்டாவில் வாசி உயிரிழப்பு!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஹைஏஸ் வான் ஒன்றின் மீது அநுராதபுரத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அதில் பயணம் செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இராமமூர்த்தி சுப்ரமணியம் (கோண்டாவில் மணியம் வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

கொழும்பிலிருந்து 13 பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஹை-




ஏஸ் வானை அநுராதபுரம் யாழ்ப்பாணம் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### முள்ளிப்பாலம் உடைந்து போக்குவரத்து ஸ்தம்பிதம்!

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியிலுள்ள முள்ளிப்பாலம் உடைந்ததால் இந்த வீதியூடான போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதனால் தென்மராட்சிப் பகுதியில் இருந்து வடமராட்சிப் பகுதிக்குச் செல்லும் பயணிகள் சாவகச்சேரி - பருத்தித்துறை வீதியையே பயன்படுத்தவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினர் பயணிகளின் நன்மை கருதி முள்ளிப்பாலம்வரை ஒரு பஸ்ஸில் பயணிகளை ஏற்றிச் சென்று பாலப்பகுதியில் இறக்கிவிட்டுப் பின்னர், மறுகரையில் உள்ள வேறொரு பஸ்மூலம் பயணிகளை ஏற்றிச் செல்கின்றனர்.

கனரக வாகனங்கள் இந்தப் பாலத்தினூடாகத் தொடர்ச்சியாகப் (12 ஆம் பக்கம் பார்க்க)

**எமக்கு ஒரு நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகின்றார்கள். எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.**

**வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்**

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை (மல்லாகம்)

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத் தொகுதிகள் என்பன 01.01.2005 தொடக்கம் 31.12.2005 வரை

### குத்தகைக்கு/ வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2005

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி - 2004.11.25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 2004.11.30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி -2004.12.01 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிவரை
ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01. அளவெட்டி மலைவேம்படி சந்தை | - | 40250.00 | 1000/= | 150/= |
| 02. மல்லாகம் பொதுச்சந்தை | - | 10500.00 | 500/= | 150/= |
| 03.இறால்மடம் சந்தை | - | 550.00 | 500/= | 150/= |
| 04.மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 300/= | 55000.00 | 1000/= | 150/= |
| 05.அளவெட்டி கருவாட்டுக் கடை இல.6 | 125/= | - | 500/= | 150/= |
| 06. அளவெட்டி கருவாட்டுக் கடை இல.7 | 125/= | - | 500/= | 150/= |
| 07. மல்லாகம் சந்தை கருவாட்டுக் கடை | 300/= | 525.00 | 500/= | 150/= |
| 08.மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300/= | 1050.00 | 500/= | 150/= |
| 09.மல்லாகம் பொதுச்சந்தைக் கடைத் தொகுதிக் கடைகள் இல.5 | 300/= | 25,000.00 | 1000/= | 150/= |
| 10.மல்லாகம் பொதுச்சந்தைக் கடைத் தொகுதிக் கடைகள் இல.6 | 300/= | 25,000.00 | 1000/= | 150/= |
| 11.மல்லாகம் பொதுச்சந்தைக் கடைத் தொகுதிக் கடைகள் இல.7 | 300/= | 25,000.00 | 1000/= | 150/= |
| 12. கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 150/= | 10,000.00 | 500/= | 150/= |
| தெல்லிப்பழை உப அலுவலகம் | | | | |
| 01. கூத்தன்சீமாச் சந்தை | - | 475.00 | 500/= | 150/= |
| 02. கடைத்தொகுதி கடை இல.1 | 100/= | - | 500/= | 150/= |
| 03. கடை இல.2 | 100/= | - | 500/= | 150/= |

குறிப்பு:-
* மாத வாடகைகள் யாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
* கேள்விப்பத்திரப் பணம், கேள்வித்தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 15 வீதமும் மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
* கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையை கொண்டுவருதல் வேண்டும்.
* இறைச்சிக்கடை விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2 ஆதனவரி அறிவித்தல் -2005

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலக எல்லைக்குள் தற்போது 1964 ஆம் ஆண்டு ஆதனங்கள் மதிப்பீடு, ஆண்டு பெறுமதியின் 3 வீதம் வசூலிக்கப்படுகிறது. சபையின் நிர்வாக அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளவேண்டியிருப்பதால் அதே மதிப்பீட்டின் 10 வீத தொகையை 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை வரியிறுப்பாளர்கள் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### 3 படவரைஞராகப் பதிவுசெய்தல்

2005 ஆம் ஆண்டு படவரைஞராக இச்சபையில் தம்மைப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### 4 வியாபார உரிமம், அனுமதிப் பத்திரம் - 2005

எமது பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2005 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான உரிய படிவத்தினைச் சபையில் பெற்று, பூர்த்திசெய்து 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் மல்லாகம், மயிலிட்டி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

### 5 வீடமைப்பு நகர சீரதிருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 263 இன் பிரகாரமான அறிவித்தல்

வலி. வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எல்லைக்குள் சபையின் அனுமதியின்றி அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் போன்ற வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை அறியத் தருகின்றேன். எனவே, கட்டப்படவேண்டிய கட்டடங்களுக்கு மல்லாகம், தெல்லப்பளை, மயிலிட்டி, காங்கேசன்துறை உப அலுவலகங்களில் விநியோகிக்கப்படும் கட்டட விண்ணப்பப்படிவத்தைப் பெற்று விண்ணப்பம்செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறல்வேண்டும் என அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### 6 வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை (மல்லாகம்) நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவி விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு பின்வரும் தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) பிரதேசசபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2) க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3) 18 - 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4) தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடையவர்கள் தங்கள் சுயவிபரத்துடன் கிராமசேவகரின் சான்றிதழைப் பெற்று 24.12.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தெரிவுசெய்யப்படும் மேற்படி பதவிக்கான உத்தியோகத்தர்கள் பிணைப்பணமாக ரூபா 5000/= செலுத்தல் வேண்டும்.

**செல்லையா செல்வரத்தினம்**
செயலாளர்,
வலி. வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (மல்லாகம்)

*வலி. வடக்கு பிரதேசசபை,*
*காங்கேசன்துறை (மல்லாகம்)*
*16.11.2004*

*(சி-3369)*

## தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில் வடமராட்சியில் மருத்துவ முகாம்!

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினவிழா அன்று இலவச மருத்துவ முகாமொன்றை நடத்த வடமராட்சி அரசியற்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த வைத்திய முகாம் எதிர்வரும் 26 ஆம் திகதி தலைவரின் பிறந்த நாளன்று க்ரவெட்டி மேற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்த மருத்துவமுகாமில் கண், கால், நீரிழிவு ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. (12)

## வடமராட்சியில் மாவீரர்நாள் நிகழ்வு

மாவீரர் நாள் நிகழ்வு வடமராட்சிப் பிரதேசத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. இதில் மாவீரர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கரவெட்டிப் பிரதேசத்துக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

மாவீரர் நாளன்று வடமராட்சி மாவீரர்களின் பெற்றோர்களும், வன்னிப் பிரதேச மாவீரர் பெற்றோர்களும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு கௌரவிக்கப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு வடமராட்சி துயிலும் இல்லம் நோக்கி பாண்ட் வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (12)

## ஆசிரிய கலாசாலையில் நாளை ஒளிவிழா!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கிறிஸ்தவ மன்றம் நடத்தும் ஒளி விழா நாளை காலை 8.30 மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில் தலைவர் அ.செல்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் கோட்டகுரு முதல்வர் கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் பிரதமவிருந்தினராகவும் யாழ். மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் ஜே.மெலிஸ்அடிகளார், கோப்பாய் திருநெல்வேலி பங்குத்தந்தை ஏ.செலஸ்ரின் மாஸ்கறிக்ஞ ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் பலாலி ஆசிரியர்கலாசாலை ஓய்வு பெற்ற உபஅதிபர் சென்றோக் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.





நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த
பரிக்ஸ் (ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)




நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
ராஜ், திவ்யா நடித்த
கேம்பஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

சமாதான முயற்சிகள் வலுப்பெற

# யுத்த நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்வது அவசியம்!

## தென்னாபிரிக்கப் பேராசிரியர்

(கொழும்பு)

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு, யுத்தநிறுத்த ஒப்பந்தம் தற்போதைய நிலைக்குப் பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட வேண்டுமென, சர்வதேச சமாதான ஆலோசகர் பேராசிரியர் நிக்கலஸ் ஹேசம் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சட்ட ஆலோசகராக விளங்கிய ஹேசம் - இலங்கையில் யுத்த நிறுத்தத்தை பலப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் சூடான், புருண்டி, நேபாளம் ஆகிய நாடுகளில் சமாதான ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் அதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கு, அமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போதைய யுத்த நிறுத்த உடன்பாடிக்கை இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியாகும். இது அரசியல் ரீதியில் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு இதுவொரு முக்கிய விடயமாகும். கொலைகள் போன்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்குத் தற்போதைய யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விதிமுறைகள் ஏதும் இல்லை.

எனவே, இதற்கான ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மக்களின் அர்ப்பணிப்பே யுத்த நிறுத்த உடன்படிக்கையும், சமாதானமும் இவ்வளவு காலமும் நீடித்துச் செல்வதற்கு காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

இந்தியாவுடனான ஒப்பந்தம்

# இராணுவத் தீர்வுக்குப் பயன்படுமென புலிகள் அஞ்சத் தேவையில்லையாம்!

ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொள்ளப் போகும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு-இனப்பிரச்சினை, இராணுவத் தீர்வுக்குப் பயன்படுத்தப் படுமென விடுதலைப் புலிகள் அஞ்சத்தேவை யில்லை என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

தனது பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஏனைய நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையைப் போன்றே, இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடும் இருக்கும். இதனை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுக்காகப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிடவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (01)

நோர்வே வெளிவிவகார அமைச்சர்

# தாமதமாகச் சென்றதால் விமானத்தைத் தவறவிட்டார்



சமாதான முன்னெடுப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் கலந்துரையாடிய பின்னர், ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துவிட்டு, தாமதமாக விமான நிலையத்துக்குச் சென்றதால், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் குறித்த விமானத்தில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் - கடந்த 11ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு டுபாய் செல்லவிருந்தார்.

அங்கிருந்து கெய்ரோ நோக்கிப் புறபபடத் திட்டமிட்ட அவர், குறிதத நேரத்துக்கு கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்குச் செல்லாததால், 11 ஆம் திகதி 8.30 மணிக்கு டுபாய் புறப்பட்ட விமானத்தை தவறவிட்டார்.

இதனால் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனை, 11ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு டுபாய் சென்ற விமானத்தில் பயணிக்க, விமான நிலைய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அடுத்த நாள் 12 ஆம் திகதி அதிகாலையே அவர் டுபாய் சென்றார்.

டுபாயிலிருந்து கெய்ரோ நோக்கிச் செல்லும் பயணிகள் விமானத்தில் சென்றால், பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தின் ஜனாசாவை ரமலாவுக்கு வழியனுப்பும் வைபவத்தில் கலந்துகொள்ள முடியாமல் போகுமென்பதால், டுபாயில் நின்ற வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சனை கூட்டிச் செல்வதற்காக, நோர்வே அரசு தனியான சிறப்பு விமானமொன்றை டுபாய்க்கு அனுப்பி வைத்ததாகவும் கூறப்படுகிறது.

## பிக்குவின் மனுமீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

புத்த பகவானின் தலை பொறிக்கப்பட்ட பொருட்களை இலங்கையில் விற்பனை செய்வதைத் தடுக்கவேண்டும் என்க்கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த மனுவை பௌத்தபிக்கு ஒருவர் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையில் நடைபெற்றது.

இந்த மனுவின் பிரதிவாதிகளான பொலிஸ் மா அதிபர், வெளிநாட்டமைச்சர் மற்றும் சுங்கப்பணிப்பாளர் ஆகியோர் இதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே நீதியரசர் குழு மனுவின் தீர்ப்பை ஒத்திவைத்தது.

# அரசின் சமாதான முன்னெடுப்புக்கு ஜே.வி.பி தடையாகவுள்ளது!

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்துக்கு - எதிர்க்கட்சி எந்த வகையிலும் தடையாக இல்லை. அரசாங்கத்துக்குள்ள ஒரேயொரு தடை ஆளும்கட்சியில் அங்கம் வகிக்கும் - ஜே.வி.பி.தான் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜே.வி.பி. மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றின் பின்பு செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

ஒஸ்லோ மற்றும் ரோக்கியோ பிரகடனங்களின் அடிப்படையில் சமாதானத் தீர்வு காண்பதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி எந்த விதத்திலும் எதிர்ப்பில்லை. இதனைப் பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கமோ, எதிர்க் கட்சியோ தடையாக இல்லை. அரசில் பங்காளியாக இருந்து கொண்டு, ஜே.வி.பி.தான் இடையூறுகளை ஏற்படுத்துகிறது.

அவர்களுக்கு நாட்டு நலனில் அக்கறை இருக்குமானால், தமது எதிர்ப்பை வாபஸ் பெற்று, பொது மன்னிப்புக்கோரி ஜனாதிபதியின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

இதேவேளை - எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்துக்குறித்து, ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தமது தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என, விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டை தான் ரணில் விக்கிரமசிங்கவும் கொண்டுள்ளார்.

ஆனால், நாம் இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டிய தேவை எமது கட்சிக்கு இல்லை. அப்படிக் கோருவதென்றால், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழீழத்துக்கு அடித்தளமிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர்தான் மன்னிப்புக் கோர வேண்டும் எனத் தெரிவித்தார்.

## 9 ஆயிரம் யோசனைகளுடன் வரவு – செலவுத் திட்டம்!

அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு பொது அமைப்புகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற 9 ஆயிரம் யோசனைகளையும் உள்ளடக்கியே இந்த முறை, வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்தமுறை வரவு - செலவுத் திட்டம் பற்றாக்குறை என்பதையும் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

கடந்த அரசாங்கம் இறுதியாகத் தயாரித்த வரவு - செலவுத்திட்டத்திலும் பற்றாக்குறை காணப்பட்டது. அதேவேளை நாம் இந்தமுறை சமர்ப்பிக்கும் வரவு - செலவுத்திட்டத்தில் பற்றாக்குறை சற்று அதிகமாகவே உள்ளது.

வரவு - செலவுத்திட்டம் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டது.

இந்தமுறை வரவு - செலவுத்திட்டத்தில் மக்களுக்குப் பல்வேறு நிவாரணங்கள் கிடைக்கவுள்ளன. அரசியல் கட்சிகளிடமும், பொதுமக்களிடமும் சிறந்த யோசனைகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 15 அடி நீள மலைப்பாம்பால் திருகோணமலை பரபரப்பு!

திருகோணமலை - மனையாவெளிப் பகுதியில் மலைப்பாம்பு ஒன்றின் அட்டகாசத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் அருகிலுள்ள கடற்படைத்தளப் பகுதியிலிருந்து வந்த மலைப்பாம்பு ஒன்று, மனையாவெளிப்பகுதி மக்களை அச்சுறுத்தி விட்டுச் சென்றிருந்தது.

தற்போது பெய்துவரும் கடும் மழையைத் தொடர்ந்து, மனையாவெளிக்குளக்கட்டுக்கு வந்த இந்த மலைப்பாம்பு ஆடு ஒன்றை விழுங்கியது. இந்த மலைப்பாம்பைப் பார்வையிடுவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் பகுதிக்கு பெருமளவானோர் படையெடுத்தனர்.

சுமார் 15 அடி நீளமான அந்த மலைப்பாம்பு - கடற்படைத்தளப் பகுதி துப்பரவாக்கப்பட்டதையடுத்தே, அங்கிருந்து மனையாவெளிக்கு வந்ததாகக் கூறப்பட்டது. (04)

## வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக ரிரோன்பெர்னாண்டோ

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படலாம் என, அரசாங்கத்துடன் தொடர்புடைய தகவல்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிய இவர் - கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படாமல், தேசியப் பட்டியலில் இடம் பெற்றிருந்தார். எனினும், தேர்தல் முடிவின் பின்பும் தேசியப் பட்டியலில் இவருக்கு இடம் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி அடைந்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இந்த மாதத்துடன் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். இதனால் இவரது இடத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனா நியமிக்கப் படவுள்ளார்.

இதன் காரணமாக ஏற்படும் வெற்றிடத்துக்கே, ரிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை - கோபி அனானில் பதவிக் காலத்தின் பின்னர் இடம் பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கான வேட்பாளராக இவர் தன்னைத் தயார்படுத்தியபோதும், அது வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வெலிக்கடையில் கைதிகள் மோதல்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைதிகளுக்கு இடையிலான மோதலுக்குப் போதை வஸ்து தொடர்பான பிரச்சினையே காரணம் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் 6 பேர்வரை காயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தென்னாபிரிக்காவுடனான பயிற்சி ஆட்டம்

# மொங்கியாவின் அபார சதம்; இந்திய அணி முன்னிலையில்





(ஜெய்ப்பூர்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் அணி 320 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வருகிற 20 ஆம் திகதி தொடங்கவுள்ளது. முன்னதாக கிரிக்கெட் சபைத் தலைவர் அணிக்கு எதிரான 3 நாள் போட்டியில் தென்னாபிரிக்கா ஆடிவருகிறது.

முதல் நாள் முழுவதும் ஆடிய தென்னாபிரிக்கா 5 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

நேற்றுமுன்தினம் 2 ஆவது நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிரிக்கெட் சபைத் தலைவர் அணி 61 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தவித்தது.

பின்னர் வந்த தினேஷ் மொங்கியா தென்னாபிரிக்க அணி பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சைத் தவிடுபொடியாக்கினார்.

நாள் முழுவதும் துடுப்பெடுத்தாடிய தினேஷ் மொங்கியா கடைசி வரை ஆட்டமிழக்காமல் 135 ஓட்டங்களைக் குவித்தார்.

இதில் 19 பவுண்டரிகள் அடங்கும். இதனால் கிரிக்கெட் சபைத் தலைவர் அணி 5 விக்கெட்டுக்கு 320 ஓட்டம் குவித்தது. நேற்றைய இரண்டாவது நாள் முடிவில் தென்னாபிரிக்கா 94 ஓட்டங்களுக்குப் பின்தங்கியது. இன்னும் ஒருநாள் ஆட்டம் எஞ்சியுள்ளது.

## அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட்; நதன் அஸ்ரில் விளையாடுவார்!



(மெல் போர்ன்)

அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து வீரர் அஸ்ரில் விளையாடவுள்ளார்.

அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரும் 18 ஆம் திகதி மெல்பேன் நகரில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் கண்டிப்பாக ஆடுவேன் என்று நியூஸிலாந்து முன்னணி வீரர் அஸ்ரல் நிருபர்களிடம் கூறினார்.

முதுகு வலி காரணமாக நியூசவுத்வேல்ஸ் அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் கலந்து கொள்ளாத அஸ்ரல் தற்போது முழுமையாக குணமடைந்து விட்டதாகக் கூறினார்.

இந்தப் பயிற்சி ஆட்டத்தில் நியூஸிலாந்து பரிதாபமாகத் தோல்வி கண்டது. கப்டன் பிளமிங் தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். முதல் டெஸ்ட் போட்டியில் ஆடுவதை அவரும் உறுதி செய்யவில்லை. அனுபவம் மிக்க மக்மில்ன் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சேர்க்கப்படவில்லை.

இருந்தாலும் முன்னணி வீரர்கள் காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதால் அவர் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே நியூஸிலாந்து அணித்தலைவர் பிளமிங்கின் விக்கெட்டைச் சாய்ப்பதே தன்னுடைய இலக்கு என்று அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் வோர்ன் நிருபர்களிடம் பேட்டியளித்துள்ளார்.

## கப்டன் பதவி கொடுத்திருந்தால் சிறப்பாகச் செயற்பட்டிருப்பேன்!

### ஷேன் வோர்ன் கூறுகிறார்

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் கப்டன் பதவியைக் கொடுத்திருந்தால் அணியைச் சிறப்பாக வெற்றி பெற வைத்திருப்பேன் என்கிறார் உலகிலேயே அதிக விக்கெட்டுகளைச் சாய்த்த சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்த ஷேன் வோர்ன்.

இன்சைட் கிரிக்கெட் என்ற பத்திரிகைக்கு ஷேன்வோர்ன் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது -

'அவுஸ்ரேலிய அணிக்கு நான் கப்டனாக ஆகியிருப்பேன். அப்போது நடந்த மருத்துவச் சோதனையின் போது, ஊக்க மருந்து சாப்பிட்டதாகக் கூறிவிட்டனர்.

கப்டன் பதவிக்கு நான் ஆசைப்படவில்லை என்று கூறினால் அது மனதார நான் சொன்ன பொய்யாகத்தான இருக்கும். நானும் கப்டனாக விரும்பினேன். அப்படி எனக்கு வாய்ப்புக் கொடுத்திருந்தால் சிறப்பாக அணியை வழிநடத்தியிருப்பேன்.

ரிக்கி பொண்டிங் நல்ல கப்டன் தான். ஆனால் நானும் நல்ல கப்டன் என்பதை அனைவரும் உணரும் வகையில் செயற்பட்டிருப்பேன். ஒருநாள் போட்டிகளில் நான் கப்டனாக இருந்தபோது முடிவுகள் எங்கள் அணிக்குச் சாதகமாகவே இருந்தன. எனது தலைமையும் மெச்சத் தகுந்ததாகவே இருந்தது.

கப்டன் பதவி கிடைத்திருந்தால் ராத்திரியெல்லாம் தூங்காமல் இருந்து அடுத்த நாள் போட்டியைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கமாட்டேன். ரிக்கியும் நன்றாகவே தலைமைப் பதவியை வகித்தார். நான் அவருக்கு 100 சதவீத ஒத்துழைப்பை அளிக்கிறேன். இதை அவரிடமே கேளுங்கள். தயங்காமல் ஒப்புக்கொள்வார்.

ஊக்க மருந்து சாப்பிட்டதாகக் கூறி என்னை 12 மாதங்களுக்கு கிரிக்கெட் ஆடக்கூடாது என்று தடை விதித்தார்களா. அப்போது எனது அணியைச் சேர்ந்த மூத்த ஆட்டக்காரர்கள் சிலர் எனக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. ஏன் ஆதரவாகக் கூடப் பேசவில்லை அது எனக்கு பெரிய ஏமாற்றம்தான். உண்மையிலேயே நண்பர்கள் யார் என்பதை அப்போது தான் தெரிந்து கொள்ள முடிந்தது.

கில்கிறிஸ்டும் நானும் நட்புடன் இருக்கிறோம். சில விடயங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் நட்புடனேயே இருக்கிறோம். 1999 உலகக் கிண்ணப் போட்டியின் போது கூட எனக்கும் மார்க் வோவுக்கும் இடையே பூசல் என்று எழுதினார்கள். அதையெல்லாம் படித்தால் சிரிப்புதான் வந்தது. இப்போதும் அப்படித்தான் என்று அவர் மேலும் கூறினார்.

## லொஸ் ஏஞ்சல்ஸ் ரெனிஸ் ஷரபோவா சம்பியன்



அமெரிக்காவின் லொஸ் ஏஞ் சல்ஸ் நகரில் நடைபெற்று வந்த டபிள்யூ.ரிஏ சம்பியன் கிண்ணத்துக்கான ரெனிஸ் போட்டியில் - செரீனா வில்லியம்ஸை தோற்கடித்து விம்பிள்டன் சம்பியனான ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பிரான்ஸ் வீராங்கனை அமெலி மவுரெஸ்மோவுடன் மோதினார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் முதல் செட்டை 4-6 என்ற கணக்கில் தோற்றார். பின்னர் சுதாகரித்து ஆடிய அவர் அடுத்த 2 செட்களையும் 7-6, 6-4 என்ற கணக்கில் தனதாக்கி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் விம்பிள்டன் சம்பியன் மரியா ஷரபோவா (ரஷ்யா) சகநாட்டு வீராங்கனை அனஸ்டாசியா மிஸ்கினாவை எதிர் கொண்டார். இதில் முதல் செட்டை மிஸ்கினா 6-2 என்ற கணக்கில் கைபற்றினார். அடுத்த 2 செட்களையும் ஷரபோவா 6-2, 6-2 என்ற கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் மரியா ஷரபோவா (ரஷ்யா) ஆகியோருக்கிடையில் நடைபெற்றது. இதில் ஷரபோவா 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் செரீனா வில்லியம்ஸைத் தோற்கடித்தார். இதன் மூலம் டபிள்யூ.ரி.ஏ சம்பியன் கிண்ணத்தை ஷரபோவா கைப்பற்றினார்.


"அகவை ஐம்பதில் மலரட்டும் சுதந்திரம்
இன்னும் ஐம்பது கடக்க எம் வாழ்த்துக்கள்"



ஆடற்பருந்தும் அருகூட்டும் பைங்கிளியும் ஒரு கூட்டில் வாழ்ந்த அரசை உணர்ந்தவர் நாம். வேற்றுமையில் ஒற்றுமைகாண, சுயநிர்ணய உரிமையைச் சீண்டாத, தாயக மண்ணில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க ஓயாது உழைக்கும் தானைத் தலைவனுக்கு அகவை ஐம்பதே வருக, வருக.

நேற்றுப்போல் இருக்கிறது! தறிகெட்டு தமிழர் தம் நிலைகெட்டு நின்றபோது வயது பதினாறிருக்கும் இளைஞன் இலட்சிய வேட்கைகொண்டு களத்திற் குதித்தது. பதினெண்ணாயிரம் மாவீரரைப் படைத்த நம் தானைத் தலைவன் – ஒட்டுமொத்தமாய் தமிழர் தம் நெறிகாட்டி.

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே" என்ற புறநானூற்றுச் செய்யுரைக்கு இலக்காக – இமையம்போல் அசையாது இதயம் கவர்ந்த தமிழர் தம் இதயக்கனி. இலக்குத் தெரிந்த பார்த்தன். தமிழர் தம் வாழ்வு தழைக்க வந்த தம்பி எங்கள் நம்பி.

ஒன்றாய் நிற்க நன்றாய் உழைக்கும் இலட்சிய வேங்கை திண்ணிய மார்பு.

புகழொடு தமிழினம் வாழ்வதே இலக்கென்பதை கணமும் மறவாக் கரிகாலனே!!

அகவை ஐம்பதில் செம்மனத்தோடு செந்தமிழர் கூட்டம் சென்னிமேல் வைத்து உன்புகழ் பாடும்

கடந்த கால அரசியலாளர் சாதிக்கத் தவறிய சாதனைக்குப் பார்த்த சாரதியானாய் தமிழர் தம்வேட்கையை தரணியே உணர வைத்த உத்தம தலைவா!

அகவை ஐம்பதே வருக. வருக.

இன்னும் ஐம்பது கடக்க எம் வாழ்த்துக்கள்.

பைந்தமிழர் பசுமைகாண, செழுமையின் கீர்த்தியில் திளைப்பதை உமது காந்தக் கண்கள் பார்த்து மகிழட்டுமென இறையருள் இறைஞ்சி எதிர்கொண்டு நிற்கிறோம். நின் அகவை ஐம்பதை.

வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

நிர்வாகிகள், உறுப்பினர்கள், பணியாளர்கள் தனியார் போக்குவரத்து சேவை சங்கங்களின் ஒன்றியம்.

(985)



மாணவர் மலர்

# மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

1 ஆம், 2 ஆம், 3 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் ஆறுவகைச் சொற்களில் ஒன்றைக் குறிக்கும். அதன் சரியான விடையின் கீழ் கோடு இடுக.

01. புத்தகம், மேசை, யானை
 1) இடப்பெயர் 2) குணப்பெயர் 3) பொருட் பெயர்

02. வாய், மலர், காய்
 1) சினைப்பெயர் 2) காலப்பெயர் 3) தொழிற்பெயர்

03. கொழும்பு, பஸ் நிலையம், காலி
 1) காலப்பெயர் 2) பொருட்பெயர் 3) இடப்பெயர்

04. கண்ட இடங்களில் குப்பைகளைப் போடுவதைத் தவிருங்கள் என்பதில் உள்ள எழுவாய்
 1) கண்ட 2) இடங்களில் 3) நீங்கள்

05. ஐவகை நிலங்களில் ஒன்று
 1) மருதம் 2) களஞ்சியம் 3) அந்தப்புரம்

06. மனம் உடைந்து போதல் என்பது
 1) சந்தோஷம் 2) துன்பப்படுதல் 3) மனம் உடைந்தது

07. செல்கிறான் என்பது
 1) இறந்த காலம் 2) எதிர்காலம் 3) நிகழ்காலம்

08. வெண்டாமரை என்பதைப் பிரித்து எழுதினால்
 1) வெள்ளை + தாமரை 2) வெண்மை + தாமரை
 3) வென்மை + தாமரை

09. காகம் கனிந்த பழத்தைக் கொத்தித் தின்றது. இதில் உள்ள பயனிலை அடைமொழி
 1) காகம் 2) கொத்தித் 3) கனிந்த

10. தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை
 1) 4 2) 247 3) 18

11. ஒரு முக்கோணத்திற்கு எத்தனை பக்கங்கள் உண்டு.
 1) 4 2) 6 3) 3

12. பி.ப. 5.25 ஐ நியமக் கடிகார நேரத்தில் எழுதினால்,
 1) 5.25 மணி 2) 17.25 மணி 3) 17.25மணி

13. 2 மீற்றரில் உள்ள சென்ரி மீற்றர்களின் அளவு
 1) 20 2) 200 3) 2000

14. சூரியன் உதிக்கும் திசைக்கு எதிர்த்திசை
 1) கிழக்கு 2) மேற்கு 3) வடக்கு

15. 4835 என்பதில் நான்கு என்னும் இலக்கம் குறிப்பது
 1) 400 2) 4000 3) 40000

16 ஆம், 17 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறுக்காகவும் மேலிருந்து கிழாகவும் மூன்று எழுத்துக்கள் கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடு இடுக.

16.

| | | |
|---|---|---|
| அ | | து |
| சோ | | ம் |
| கு | | பி |

1) மு க வை  2) மு ட ம்  3) மு க ம்

17.

| | | |
|---|---|---|
| உ | ம | து |
| | | |
| வ | ம் | பு |

1) தரம் 2) தவம் 3) தகுதி

இல. 18 முதல் 20 வரையிலான வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

18. மரம், புத்தகம், ஆசிரியர் என்பன எவ்வகைச் சொற்கள்
.....................................................................................

19. படித்து, எழுந்து, விழுந்து என்பன எவ்வகைச் சொற்கள் ஆகும் .....................................................................

20. ஓடி ஓடி, பாம்பு பாம்பு, ஐயோ ஐயோ என்பது எவ்வகைச் சொற்களாகும் .....................................................................

இலக்கம் 21 முதல் 24 வரையுள்ள வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடு இடுக.

21. 1) கரட், பீற்றூட், கிழங்கு, உருளைக்கிழங்கு
 2) வெள்ளை, கறுப்பு, பச்சை, மஞ்சள்
 3) கதிரை, மேசை, வாங்கு, கட்டில்

22. 1) புல்லாங்குழல், நாதஸ்வரம், மேளம், தபேலா
 2) சுறா, அறக்குளா, மீன், சூரை
 3) துடுப்பாட்டம், உதைபந்து, கரப்பந்து, ஹொக்கி

23. 1) பனை, தென்னை, வாழை, கமுகு
 2) கிளி, மைனா, குயில், காகம்
 3) சிங்கம், புலி, விலங்குகள், கரடி

24. 1) மா, பலா, வேம்பு, முதிரை
 2) கார், பஸ், போக்குவரத்துச் சாதனம், லொறி
 3) பசு, ஆடு, குதிரை, முயல்

பின்வரும் இசைக் கருவிகளின் பெயர்களை எழுதுக

25 
.....................

26. 
.....................

27. 
.....................

28. 
.....................

பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

29. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொலாகும். முதலெழுத்து மானத்தில் உண்டு. மனத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து வானத்தில் உண்டு. வாக்கில் இல்லை. மூன்றாவது எழுத்து அரத்தில் உண்டு. அங்கத்தில் இல்லை. நான்காவது எழுத்து கம்பத்தில் உண்டு. கண்டியில் இல்லை.
.....................................................................





இங்கே மடிக்கவும்

01. 3Kg இல் எத்தனை 250g பைக்கற்றுக்கள் உள்ளன?

.......................................................................

02. 30 வெண்கட்டிகளை மாலா, குமார், பாலா, ரவி, மயூரன், என்போருக்கிடையில் சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்கு எவ்வளவு கிடைக்கும்?

.......................................................................

03. 6805ml ஐ l, ml இல் தருக?

.......................................................................

04. 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?

.......................................................................

05. 7/10 ஐ தசம பின்னத்தில் எழுதுக.

.......................................................................

06. 8453 = ☐ + 400+50+3 பெட்டிக்குள் வர வேண்டிய எண்ணை எழுதுக.

.......................................................................

07. ஐயாயிரத்து நானூற்று மூன்று என்பதை இலக்கத்தில் எழுதுக.

.......................................................................

08. கார் ஒன்றுக்கு நான்கு சில்லுகள் உள்ளன. அவ்வாறான 35 கார்களுக்குத் தேவையான சில்லுகள் எத்தனை?

.......................................................................

09. பிரதான திசைகளைப் படத்தில் குறித்துக் காட்டுக.

.......................................................................

10. 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?

.......................................................................

11. இரண்டு ரூபாவை மாற்றிய போது, நான்கு சமமான நாணயங்கள் கிடைத்தன. அவை யாவை?

.......................................................................

12. கண்டிய நடனக்காரர் ஒருவரின் தலையின் படம் உள்ள காசுத்தாள் எது?

.......................................................................

13.
```
  3.8
+ 4.3
-----
```

14. 

இம் மணிக்கூட்டு முகப்புக் காட்டும் நேரம் என்ன? (சாதாரண நேரத்தில்)

.......................................................................

15. 2 Kg பருப்பின் விலை ரூபா 116.00 எனின், 500 g பருப்பின் விலை யாது?

.......................................................................

16. XIX என்பதை இந்து அராபிய எண்ணில் எழுதுக.

17. 5l பாலை 250ml கொண்ட எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்?

.......................................................................

18.
```
   l     ml
  18    550
  12    640
   8    320 +
-------------
=============
```

19.
```
   ______
5 | 158
```

20.
```
   Kg     g
  484    875
- 312    869
-------------
```

21.
```
  8304
   x 3
  ----
  ----
```

22. 25, 21, 17, ☐, 9, ☐ வெற்றுக்கூடுகளில் வரவேண்டிய எண்களை எழுதுக.

23. இன்று திங்கட்கிழமையாயின் நாளை மறுநாள் என்ன கிழமை?

.......................................................................

24. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் ரூபா 1000 வரையிலான காசுத்தாள்கள் யாவை?

.......................................................................

25. 

...................... அடுத்து வரும் உருவங்களை வரைக.

# சுற்றாடல் சார் செயற்பாடுகள்

சுருக்கமான விடை தருக

01) உமது சூழலில் காணப்படும் வித்துக்கள் இரண்டினை எழுதுக.
1. ................ 2. ..............

02) எண்ணெய் தரும் வித்துக்கள் இரண்டினை எழுதுக.
1. .............. 2. ..............

03. வித்து முளைப்பதற்குத் தேவையான காரணிகள் எவை?
1. .................... 2. ...............

04. வித்துக்களைச் பரம்பலடையச் செய்யும் காரணிகள் எவை?
..............................................
..............................................
..............................................

05. நீரில் முழுமையாக அமிழ்ந்திருக்கும் தாவரம் எவை?
..............................................
..............................................
..............................................

06. பெரிய தனியான இலைகளைக் கொண்ட தாவரங்கள் எவை?
..............................................

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

30 தொடக்கம் 34 வரையுள்ள வினாக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் X எனவும் எழுதுக.

30. முதிர்ச்சியடைந்த வித்துக்கள் தான் கூடிய விளைச்சலைத் தரும் ( )

31. நீரில் மிதக்கும் தாவரம் ஐதரில்லா ஆகும். ( )

32. கியூலெக்ஸ் நுளம்பு ஆனைக்கால் நோயை உண்டாக்கும் ( )

33. ஒரு மீற்றர் 1000 சென்ரி மீற்றர் ஆகும். ( )

34. அலங்காரத் தையல் வகையில் ஒன்று விஸ்பம் ஆகும் ( )

35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களின் படங்களில் பிழையான படத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

36.



1 2 3 4

37.



1 2 3 4

38.



1 2 3 4

39.



1 2 3 4

40.



1 2 3 4

01. பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக் களுக்கு விடை எழுதுக.

ஔவையார் ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். அவர் இயற்றிய நீதி நூல்களில் ஒன்று மூதுரையாகும். அதில் முப்பத்தொரு பாடல்கள் உண்டு. இப்பாடல்கள் வெண்பாக்களால் ஆனவை. நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்க நெறிகள் பல அதிலே கூறப் பட்டுள்ளன. நீங்கள் கற்றுத் தெரிந்து கொள்வதற்காக மூதுரையில் இருந்து ஐந்து பாடல்கள் தரப்பட்டுள்ளன.

1) புலவர் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று தருக.

........................................

2) நீதி என்பதற்கு எதிர்க் கருத்துள்ள சொல் ஒன்று தருக.

........................................

3) மடல்கள் என்பதற்கு ஒருமைச் சொல்ஒன்றினை எழுதுக.

........................................

4) முன்னிலைப் பன்மைச் சொல் ஒன்று தருக.

........................................

5) கூறப்பட்டுள்ளன என்பதன் நிகழ்கால வடிவத்தை எழுதுக.

........................................

6) ஔவையார் இயற்றிய நீதி நூல்கள் இரண்டு தருக.

........................................

7) தமிழ்ப் புலவர் என்பதைப் பிரித்தெழுதுக.

........................................

8) ஔவையார் ஓர் சிறந்த தமிழ்ப் புலவர். இவ்வாக்கியத்தில் உள்ள பயனிலை அடைமொழி யாது.

........................................

9) மூதுரையில் எத்தனை பாடல்கள் உள்ளன.

........................................

10) மூதுரைப் பாடல்கள் எதனால் ஆனவை?

........................................

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1) வெடித்தால் / காற்று/ பலூன்/ வெளியேறும்/ தானே

........................................

2) அமெரிக்காவில்/ மிலான் நகரில்/ தோமஸ் அல்வா எடிசன்/ பிறந்தார்/ உள்ள ........................................

03. பின்வரும் தொடர்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் எழுதுக.

1) விடிய விடிய : ........................................

2) மேலே மேலே : ........................................

04. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில்) எழுதுக

1) கிராமம் ........... 2) சிவப்பு நிறம் ..........

3) தண்ணீர் .......... 4) பால் ................

05. பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.

1) Birds .......... 2) forest ............

3) Son ............ 4) Balloon ...........

06. சரியான விடையின் கீழ் கோடு இடுக.

1. புதுவருடத்தில் ( சித்திரை மாதத்தில்) பூக்கும் பூ எது?

1) தாமரை 2) முருங்கை 3) கார்த்திகைப் பூ 4) வாழை

2. வீட்டுத் தோட்டத்திலுள்ள பூக்களை நாடிவரும் பிராணி எது?

1) மண்புழு 2) வௌவால் 3) தேனீ 4) எலி

3. சரியான நடத்தல் தொடர்பான செயற்பாட்டைக் காட்டு வது எது?

1) 

2) 

3) 

4) 

4. வகுப்பறையைச் சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தும பொருள் எது?



(1) (2) (3) (4)

5. அரசு இலச்சினையில் அடிப்பாகத்தில் காணப்படுபவை

1) முருகன் - வள்ளி 2) சூரியன் - சந்திரன்

3) சிவன் - பார்வதி 4) சிங்கம் - தர்மசக்கரம்

6. இலங்கையின் தேசியப் பறவை
1) காட்டுக் கோழி 2) கிளி 3) புறா 4) மயில்

7. விரைவாக ஆவியாகக் கூடிய திரவம் எது?
1) நீர் 2) பெற்றோல்
3) தேங்காய் எண்ணெய் 4) மண்ணெண்ணெய்

8. சாதாரண பயணிகள் பயன்படுத்தும் பொதுவான போக்கு வரத்துச் சாதனம் எது?
1) மோட்டார் வண்டி 2) ஆகாய விமானம்
3) பேருந்து 4) மோட்டார் சைக்கிள்

9. பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் எது?
1) இருவாட்டி மண் 2) மணல் மண்
3) களிமண் 4) உக்கல் மண்

10. சாதாரண மின்சுற்று ஒன்றை அமைக்கத் தேவையான பொருட்கள்
1) மின்கலம், மின்குமிழ்
2) மின்கலம், மின்குமிழ், செப்புக்கம்பி
3) மின்கலம், காந்தம், பாதுகாப்பான செப்புக்கம்பி
4) மின்கலம், மின்குமிழ், ஆளி, பாதுகாப்பான செப்புக்கம்பி

07. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் பழங்களின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

1) 2) 3) 4)



.............. ...................... ..............

வாழைப்பழம், மாதுளம்பழம், விளாம்பழம், றம்புட்டான், அன்னாசி, முந்திரிகை, பலாப்பழம், அப்பிள்பழம், தோடம்பழம்

8. பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன?

1) மண்வெட்டி : ..........................................

2) சீவுளி : ..........................................

3) சாந்தகப்பை : ..........................................

4) துருத்தி : ..........................................

9. பின்வரும் பாடலில் உள்ள வெற்றிடங்களில் பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக.

கண்ணே எழுந்திடுவாய்
.................. கண் மலர்வாய்
சின்னஞ் .................. மலரே
.............. நீங்கி நீ ..........

.................. கரையுது பார்
காலையும் ஆனது ..............
...................... கூவுது பார்
சின்னக் ..............பாடுது பார்

10. மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வெற்றிடத்தில் எழுதுக

1. ஐம்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா
(அ) வெள்ளிவிழா (ஆ) பொன்விழா
(இ) வைர விழா (ஈ) அமுத விழா .........

2. கூவி அழைப்பான் கூடி உண்ணுவான். அவன் யார்?
(அ) கிளி (ஆ) புறா
(இ) மைனா (ஈ) காகம் .........

3. அகத்தின் .............. முகத்தில் தெரியும். இடை வெளிக்குப் பொருத்தமான சொல்
(அ) அழகு (ஆ) அளகு
(இ) அலகு (ஈ) கருத்து .........

4. நான்காவது சதுர எண் எது
(அ) 4 (ஆ) 8 (இ) 12 (ஈ) 16 .........

5. சட்டி, பானை வனைபவன்
(அ) தட்டான் (ஆ) குயவன்
(இ) வண்ணான் (ஈ) மேசன் .........

11. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
1) $3,249 = ............ + 200 + 40 + 9$ வெற்றிடத்தில் வரும் எண்ணை எழுதுக.

2) இவ்வெண் சட்டம் காட்டும் எண் யாது?




3) மூவாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது என்பதை இலக்கத்தில் எழுதுக

..............................................................................

4) ........... 3000 ......... முந்திய எண்ணையும், பிந்திய எண்ணையும் எழுதுக.

5) கூட்டுக
4527
603
16

6) கழிக்குக
8003
4175

7) பெருக்குக
403
x 5

8) பிரிக்குக
4 | 836

9) எண்கோலத்தில் வரும் வெற்றிடங்களை நிரப்புக
185, 180, 175, ......... 165, 160,

..............................................................................

10) பெருக்கல் அட்டவணையைப் பூர்த்திசெய்க

| X | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| 1 | .... | 2 | ... | 4 | .... |
| 2 | .... | 4 | ... | 8 | .... |
| 3 | 3 | ... | ... | 12 | .... |
| 4 | .... | 8 | ... | ... | 20 |
| 5 | 5 | ... | 15 | ... | .... |

# க.பொ.த சாதாரணதரம் மாதிரிப் பரீட்சை - 2004

## நீருயிர் வளத்தொழில் நுட்பம்

### பகுதி I

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) இலங்கையில் காணப்படும் மிகப்பெரிய கடல்நீரேரி.
1. யாழ்ப்பாணக்கடனீரேரி 2. நீர்கொழும்பு கடனீரேரி
3. புத்தளம் கடனீரேரி 4. மட்டக்களப்பு கடனீரேரி

02) இரவு நேரத்தில் கடலில் பயணம்செய்யும் ஒரு கப்பலின் பயணப் பாதையை தூரத்திலிருந்தவாறே எவ்வாறு தெளிவாக அறிந்து கொள்ளலாம்.
1. கப்பலில் இருந்து வெளிவிடப்படும் சமிஞ்ஞை மூலம்
2. கப்பலின் சமிஞ்ஞை ஒளிகள் மூலம்
3. கப்பலின் வேகம் மூலம் 4. கப்பலின் அசைவின் மூலம்

03) கடலில் உள்ள பிரதான முதல் உற்பத்தியாக்கியானது.
1. கப்பலின் பிளாக்கன்கள் 2. கடற்புற்கள்
3. கடல் அல்மாக்கள் 4. கண்டற்தாவரங்கள்.

04) $270^0$ யில் கடலுக்குச் சென்ற ஒரு படகு மீண்டும் கரைக்கு வரும்போது எத்தனை பாகையில் செலுத்தப்படவேண்டும்.
1. $180^0$ 2. $90^0$ 3. $70^0$ 4. $45^0$

05) கடலில் உள்ள பிரதான முதல் உற்பத்தியாக்கியானது.
1. மே தொடக்கம் செப்ரெம்பர் வரை
2. நவம்பர் தொடக்கம் பெப்பரவரி வரை
3. ஜனவரி தொடக்கம் ஏப்ரல்வரை
4. ஒக்டோபர் தொடக்கம் ஜனவரி வரை

06) S.O.S சமிஞ்ஞை எப்போது வெளிவிடப்படும்.
1. படகு நங்கூரமிடப்பட்டுள்ளபோது
2. மற்றுமொரு படகுடன் தொடர்புகொள்ளும்போது
3. படகு ஆபத்தில் சிக்கியவேளையில்
4. எஞ்சின் செயலிழந்து படகு தத்தளித்தவாறு மிதக்கும்போது

07) இலங்கை எந்த நெடுங்கோடுகளுக்கிடையில் இருக்கின்றது.
1. $69^0$ - $71^0$ 2. $75^0$ - $79^0$
3. $79^0$- $82^0$ 4. $80^0$ - $84^0$

08) கடல் நீரின் ஊடு காட்டும் தன்மை குறைவடையும்போது அதிகளவு மீன்கள்.
1. உபகரணங்கள் மீன்களுக்குத் தென்படாமை.
2. இரை அதிக அளவில் கிடைத்தல்
3. மீன்கள் நீரில் மேற்படைகளுக்கு வருதல்
4. இரை கௌவிகளின் தாக்கம் அதிகரித்தல்.

09) மிண்டி வேர் காணப்படத்தக்க இடம்.
1. திருகலை
2. தக்கை
3. கந்துறு
4. தென்னை

10) இலங்கையில் பெருமளவு மீன் பிடிக்கக்கூடிய பிரதேசம்.
1. வடக்குப்பிரதேசம் 2. தெற்குப்பிரதேசம்
3. கிழக்குப்பிரதேசம் 4. மேற்குப்பிரதேசம்

11) தடாகத்தில் இருக்கும் நீரில் உள்ள எவ்வாயு குறையும்போது இறால்கள இறக்கின்றன.
1. நைதரசன்
2. ஐதரசன்
3. ஒட்சிசன்
4. காபனீரொட்சைட்

12) ஒரு வாரகாலம் வரை கடலில் தங்கி மீன் பிடிக்கச் செல்லும் இயந்திரப்படகொன்றில் கட்டாயமாகக் கொண்டுசெல்லக்கூடிய பொருள்கள் பின்வருவனவற்றுள் எவை.
1. எரிபொருள், பனிக்கட்டி, உணவு, பாய்மரம்
2. எரிபொருள், பனிக்கட்டி, உணவு, நீர்
3. எரிபொருள், பாய்மரம், உணவு, நீர்
4. உணவு, பாய்மரம், இரை, நீர்

13) சுறாமீனின் தசையில் அதிகமாக இருப்பது.
1. கொழுப்பு 2. புரதம் 3. தாதுப்பொருள் 4. நீர்

14) தெற்குத் திசையை இலகுவாகக் கண்டறிவதற்காக மீனவர்கள் துணையாகக்கொள்ளும் உடுக்களின் பெயர்.
1. வுராஜன் 2. சிலுவை 3. ஏழுகன்னியர் 4. ஏர்

15) சுயசமிபாடு அடைவதற்கு காரணம்.
1. பற்றீரியா 2. நொதியங்கள்
3. திசுத்திரவங்கள் 4. உப்பு

16) S , Z எனும் இரண்டு குறியீடுகளும்
1. ஆபத்து வேளைகளில் சைகை காட்டுவதற்குரியனவாகும்
2. முறையே உள்நாட்டுப் படகுகளையும், வெளிநாட்டுப் படகுகளையும் குறிப்பனவாகும்
3. படகு நீரினுள் அமிழ்ந்துள்ள அளவைக் காட்டுபவையாகும்
4. கப்பல் கயிற்றில் முறுக்கு விழுந்துள்ள திசையைக் காட்டுவனவாகும்

17) கடற்தொழிலில் சக்திப் பாய்ச்சல் நடைபெறுவது
1. சிறிய உடற்பருமன் கொண்ட விலங்குகலிலிருந்து பெரிய உடற் பருமன் கொண்ட விலங்குகளுக்கு
2. முதலுற்பத்தியாக்கிகளிருந்து இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை போசனை மட்டங்களுக்கு
3. முதனிலைப் போசனை மட்டத்திலிருந்து உற்பத்தியாக்கி மட்டத்துக்கு
4. ஊனுண்ணிகளிருந்து அனைத்து முண்ணிகளுக்கு

18) இரவு வேளைகளில் பயணஞ்செய்யும் படகின் இடது புறத்தில் காட்டப்படவேண்டிய ஒளியின் நிறம் யாது.
1. பச்சை 2. மஞ்சள்
3. சிவப்பு 4. வெள்ளை

19) கடல் நீரின் சராசரி உவர்த்தன்மை 1000 பங்கு நீருக்கு எவ் வளவு பங்காகும்
1. 20 2. 35 3. 45 4. 15

20) வடமேற்கின் எதிர்த்திசை
1. வடகிழக்கு 2. தென்கிழக்கு 3. தெற்கு 4. தென்மேற்கு

21) நீரின் வன்மை மாறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி அதில் இருக்கும்
1. உப்பு 2. ஒட்சிசன் 3. பிளாற்றன் 4. காபனீரொட்சைட்

22) டீசல் எஞ்சினில் நாலடிப்பு நடைபெறும் ஒழுங்கு யாது
1. உறிஞ்சலடிப்பு - அமுக்கஅடிப்பு - விசையடிப்பு - வெளியேற்ற அடிப்பு
2. அமுக்க அடிப்பு - உறிஞ்சலடிப்பு - விசையடிப்பு - வெளியேற்ற அடிப்பு
3. விசையடிப்பு - வெளியேற்ற அடிப்பு - உறிஞ்சலடிப்பு - அமுக்க அடிப்பு
4. அமுக்க அடிப்பு - விசையடிப்பு - உறிஞ்சலடிப்பு - வெளியேற்ற அடிப்பு

23) கடல் நீரில் பெருமளவில் அடங்கியுள்ள மூலகம்
1. ஐதரசன் 2. ஒட்சிசன் 3. சோடியம் 4. மக்னீசியம்

24) வலை பின்னும்போது பெரும்பாலாக பயன்படுத்தப்படும் முடிச்சு யாது
1. கிரவுன் முடிச்சு 2. ஆங்கில முடிச்சு 3. போலைன் முடிச்சு
4. இரட்டை தட்டை முடிச்சு

25) வேகமாக நீந்தக்கூடிய மீனினங்கள் கொண்டுள்ள இயல்பு
1. உடலில் தடித்த செதில்கள் காணப்படல்
2. பக்க வாட்டாகத் தட்டையான உடலமைப்புக் காணப்படல்
3. இரு பிளவு கொண்ட வாற்செட்டை காணப்படல்
4. நன்கு வளர்ச்சியடைந்த இடுப்புச் செட்டைகள் காணப்படல்

26) வலையில் இளக்காரம் விடப்படுவதற்கான பிரதான காரணம் யாது
1. மீன்களைப் பூக்களால் சிறைப்படுத்திப் பிடிப்பதற்கு
2. அதிகளவு மீன்களைப் பிடிப்பதற்கு
3. சேதம் ஏற்படாதவாறு மீன்களைப் பிடிப்பதற்கு
4. மீன்கள் வலையிலிருந்து விழுவதைத் தவிர்ப்பதற்கு

27) பிரதானமாக மீன்களின் சுவாசம் நடைபெறுவது
1. நுரையீரல் மூலமாக 2. தோல்மூலமாக
3. காற்றறை மூலமாக 4. பூக்கள் மூலமாக

28) நன்னீர் நீர் நிலைகள் தொடர்பான ஆராய்ச்சியில் நடத்தும் நிறுவனம் எது
1. கடற்றொழல் திணைக்களம்
2. தேசியகடற்றொழில் பயிற்சி நிறுவனம்
3. நாரா நிறுவனம்
4. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

29) தற்போது இலங்கையிலே இறால்கள் அதிக அளவில் வளர்க்கப் படும் மாவட்டம்
1. களுத்துறை 2. அநுராதபுரம் 3. புத்தளம் 4. காலி

30) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்ட ஆண்டு
1. 1934 2. 1944 3. 1954 4. 1964

31) தட்டை வடிவமுள்ள மீன்
1. முரல் 2. திருக்கை 3. விலாங்கு 4. கிரிமீன்

32) மீன் பழுதடையும்போது
1. பற்றீரியாவின் செயல்கள் மட்டும் இடம்பெறும்
2. நொதிய மாற்றங்கள் மட்டும் இடம்பெறும்
3. பக்ரீயாக்களின் செயல்களும், நொதிய மாற்றங்களும் இடம்பெறும்
4. நொதிய மாற்றங்களும் பக்ரீரியாவின் செயல்களும் ஏனைய வளிமண்டலக் காரணிகளும் பொறுப்பாக அமையும்

33) கடலில் வாழ்கின்றன. ஆனால் மீன் அல்லாத ஒரு முலையூட்டி விலங்கு எது
1. கடலாமை 2. திமிங்கிலம் 3. வன்சூரை 4. சூரை

34) பறக்கும் மீன் பறக்கும் பொழுது அதிகமாகப் பாவிப்பது
1. வால்செட்டை 2. வயிற்றுச் செட்டை
3. முதுகுச் செட்டை 4. மார்புச்செட்டை

35) முட்டையிடுவதற்காக இறால்
1. கடநீரேரியிலிருந்து ஆழ்கடலுக்குச் செல்லும்
2. ஆழ்கடலிருந்து ஆழ்கடலுக்குச் செல்லும்
3. கரையை அண்டிய பகுதியிலிருந்து ஆழ்கடலுக்குச் செல்லும்
4. ஆழ் கடலிருந்து கரையை அண்டிய பகுதிக்குச் செல்லும்

36) இறந்தபின் மீன் விறைப்படைதலானது
1. இயற்கையாக விளைவதொன்றாகும்
2. பனிக்கட்டி இட்ட பின்னரே நிகழும்
3. மிகை களிரேற்றலின் பின்னரே நிகழும்
4. மேற்குறிப்பிட்ட மூன்று சந்தர்ப்பங்களிலும் நிகழும்

37) புதிய மீன்களை இனங் காண்பதற்காக இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. பிரதேசமான செந்நிறம்கொண்ட பூக்கள் காணப்படல்
B. பிரகாசமான செதில்கள் தோலுடன் இறுக்கமாகப் பிணைக்கப் பட்டிருத்தல்
C. முண்டப்பகுதி மென்மையாகக் காணப்பட்டாலும் அப்பகுதியை விரலால் அழுக்கும்போது ஏற்படும் அடையாளம் மறையாது காணப்படல்
இவற்றுள் சரியானது - சரியானவை
1. A மட்டும் 2. C மட்டும் 3. A,C மட்டும் 4. A,B மட்டும்

38) மீன்களை தாக்கம் புண் உண்டாக்கும் நோய்கள் காரண கர்த்தா
1. வட்டப்புழு 2. பங்கசு 3. பற்றீரியா 4. வைரசு

39) கொழும்பு துறைமுகத்தில் இருந்து மாலைதீவு நோக்கிச் செல்லும் ஒரு கப்பலின் திசை காட்டித் திசை அண்ணளவாக எத்தனை பாகையாகக் காணப்படும்.
1. $90^0$ 2. $180^0$ 3. $270^0$ 4. $355^0$

40) பனிக்கட்டி இடுவதனால் மீனின் புதுத் தன்மை எவ்வாறு பேணப் படுகின்றது.
1. பனிக்கட்டியின் குளிர் உடல் இழையங்களின் ஊடாகச் சென்று உட்புறத்தேயுள்ள இழையங்களைக் குளிரச்செய்வதால்
2. மீனைப் பழுதடையச் செய்யும் பற்றீரியாக்களின் தொழிற்பாடு பனிக்கட்டியினால் தடைசெய்யப்படுவதனால்
3. பனிக்கட்டியின் குளிர், உடல் இழையங்களின் ஊடாகச் சென்று உட்புறத்தேயுள்ள இழையங்களை பனி நீராக மாற்றுவதால்
4. மீனைப் பழுதடையச் செய்யும் பற்றீரியாக்கள் பனிக்கட்டியினால் அழிக்கப்படுவதால்

## பகுதி II

(1)




I. மேலே பாரைவகையான மீன் ஒன்றின் புற உருவப் படத்தை எடுத்துக்காட்டும் படம் காணப்படுகின்றது. அவ்வரிப்படத்தில் 1,2,3,4 5,6,7,8,9,10 என இலக்கமிடப்பட்டுள்ள அங்கங்களைப் பெயரிடுக.

II. மீன் வாயின் முன் அந்தத்திலிருந்து வாற் செட்டையின் பின் அந்தம் வரைக்குமான நீளத்திற்கு வழங்கும் பெயர்யாது?

III. பின்வரும் மீனின் துணையுறுப்புக்களில் இருந்து மீன் பெறும் நன்மைக்கான தனித்தனியாக விளக்குக?
1. பக்கக் கோட்டுப் புலங்கம்
2. மார்புச் செட்டைகள்
3. வாற்செட்டைகள்
4. பூக்கள்

2)
I. சாதாரண மீன் ஒன்றில் காணப்படும் புரதத்தின் அளவு யாது?
II. தனிநபர் ஒருவர் நாளொன்றுக்கு உண்ணவேண்டிய புரதத்தின் அளவு யாது?
III. வடக்குப் பிரதேசத்தைச் சூழ கண்ட மேடையின் அகலத்தை தருக?
IV. உலக மீன் உற்பத்தியில் நன்னீரில் இருந்து பெறப்படும் மீனின் அளவைக் குறிப்பிடுக?
V. தாவர உண்ணியைச் சேர்ந்த மீன்கள் இரண்டு தருக?
VI. சிவப்பு அல்கா வகைக்குள் அடங்கும் இரண்டு அல்காக்களைக் குறிப்பிடுக?
VII. மீன்களில் காணப்படும் விற்றமின்கள் எவை?
VIII. இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யும் கடலுணவுகள் மூன்று தருக?
IX. இலங்கையிடமிருந்து கடலுணவுகளை இறக்குமதி செய்யும் நாடுகள் 02 குறிப்பிடுக?
X. உலகில் ஆண்டுக்கான தனிநபர் மீன் நுகர்வு விகிதம் கூடிய நாடு எது?

3)
I. நீரோட்டங்கள்ஏற்படுவதற்கான பிரதான காரணிகள் நான்கைத தருக?
II. வற்றுப் பெருக்கு எவ்வாறு ஏற்படுகின்றது என விளக்கி மீன் பிடித் தொழிலில் இது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன வென விளக்கு?
III. இலங்கை தென்மேல் பருவக்காற்று தாக்கத்தை ஏற்படுத்தும் மாதங்கள் எவை?
IV. கடுமையான பருவக்காற்றுக் காலங்களில் மீன் பிடிப்பதற்காக கடலில் பயன்படுத்தக்கூடிய படகுகளில் காணப்படும் விசேட மான தன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக?
V. ரியூனா (சூரை) மீனினங்கள் எப்பருவகால மாதங்களில் அதி கம் காணப்படும்?

4) இலங்கையில் பல வகையான மீன்பிடிப்படகுகள் உள்ளன. அவற்றில் பாரம்பரியமான மீன்பிடிப்படகு வகைகளும் நவீன மீன் பிடிப்படகு வகைகளும் அடங்கும். மீன் பிடிக்கைத்தொழில் விருத் தியடைந்த போதிலும் பாரமபரிய மீன்பிப்படகுகள் பயன்பாட்டில் இருந்து வருவதை அவதானிக்கலாம்.

I. இலங்கையில் பயன்பாட்டில் உள்ள பாரம்பரிய மீன் பிடிக்கலங்கள் 3 தருக?
II. பாரம்பரிய மீன் பிடிக்கலங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய நன்மைகளைக் குறிப்பிடுக?
III. பாரம்பரிய மீன்பிடிக் கலங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் தனித்தனி யாக ஆராய்க?
IV. உலக மீன் உற்பத்தியில் நன்னீரில் இருந்து பெறப்படும் மீனின் அளவைக் குறிப்பிடுக?
V. கடல் மாசடைவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்க?

5)
I. மீனவர்களின் ஓய்வூதியத்துடன் தொடர்புடைய நிறுவனங்களைக் குறிப்பிடுக?
II. மீனவர் ஓய்வூதியத்திட்டத்தின் குறிக்கோள்களைக் குறிப்பிடுக?
III. முருகை கற்பாறைத் தொடரின் முக்கியத்துவங்களை ஆராய்க?
IV. தற்போது இலங்கையில் முருகைப் பாறைத் தொடர் அழிவடைந்து வருவது முக்கிய பிரச்சினையாகும். அவ்வாறு முருகைக் கற் பாறைத் தொடர் அழிவுக்கு ஏதுவாக அமைந்த காரணிகளை ஆராய்க?
V. கடலரிப்பை தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஆராய்க?

6) பின்வருவனவற்றில் மூன்றினைப் பற்றி சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக?
I. உணவு விவசாய ஸ்தாபனம் (FAO)
II. தேசிய நீரியல் வள முகவராண்மை (NARA)
III. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் (SLBCS)
IV. சீநோர் நிறுவனம் (CEY-NOR)

ரி.டேவிட் (Dip.in Fisheries)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

அடுத்து காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்து காட்டும் முகம்.

திருக்குறள்

# நமது நோக்கு

## விளைவுகள் விபரீ தமாகலாம்!

நாட்டின் பொருளாதாரம் ஒவ்வொருநாளும் மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதன் தாக்கத்தை ஒவ்வொரு குடிமகனும் தெளிவாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

முன்னர் யுத்தத்தைக் காரணம் காட்டி விலைவாசி உயர்வு, பணவீக்கம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி போன்றவற்றை நியாயப்படுத்திவந்த அரசாங்கம் - இப்போது அப்படிக் கூறுவதற்கு எதுவுமேயில்லை.

கடந்த சுமார் மூன்றாண்டுகளாக போர் நிறுத்தம் அமுலில் இருப்பதனால் யுத்தத்தினால்தான் நாட்டின் பொருளாதாரம் இப்படி மோசமாகச் சீரழிந்து செல்கின்றது என்று எவருமே நியாயம் கூறமுடியாது.

கடந்த காலங்களில் யுத்தத்தைக் காரணம் காட்டி வெளிநாடுகளிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்றுவந்த அரசாங்கம் இப்போது சமாதானத்தின் பெயரால் சர்வதேச நிதியுதவியைத் திரட்டிக்கொள்ள முடியாதிருக்கிறது.

ரோக்கியோ மாநாட்டில் 4500 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கமுன்னர் எந்த நிதியுதவியினையும் வழங்கமுடியாதென்று நிதியுதவி வழங்கும் பிரதான நாடுகளான ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியனவும் பிரதான உதவி வழங்கும் நிறுவனங்களும் தெரிவித்துவிட்டன.

இதனால் அரசாங்கம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்காமல் - பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. அதேவேளை நன்கு திட்டமிடப்படாத சில நடவடிக்கைகளும் அரசாங்கத்தைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரநிலை மோசமடைந்து - இதைச்சமாளிக்க 6500 கோடி ரூபா - நாணயத் தாள்களை மத்தியவங்கிமூலம் அச்சிடவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இப்போதே விலைவாசி அதிகரிப்பு மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. இதனால் மக்களின் கொள்வனவு ஆற்றல் பெரிதும் பாதிக்கப்பட்டு, விலைவாசியைக் குறைக்குமாறும் - சம்பள உயர்வு வழங்குமாறும் கோரி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் 6500 கோடி ரூபா நாணயத்தை மத்திய வங்கி அச்சிட்டு வெளியிட்டால் அதன் விளைவு சாதாரண மக்களையே பாதிக்கச் செய்யும்.

தமது நிதித்தேவையை நாணயத்தாள் மூலம் அரசு நிறைவேற்றிவிட்டால் - அதன் விளைவாக விலைவாசி கட்டுக்கடங்காமல் உயரும். இந்த வருடத்தில் மட்டுமே ரூபாவின் பெறுமதி எட்டு வீதத்தால் வீழ்ச்சி கண்டிருக்கிறது.

இதனால் கொள்வனவு ஆற்றல் பாதிக்கப்பட்டு - விலைவாசி எகிறிக் குதித்துக் கொண்டிருக்கிறது. இப்படியே நிலைமை போய்க்கொண்டிருந்தால் பஞ்சம், பசி, பட்டினி போன்ற நிலை நாட்டில் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

ஏனெனில் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரமே அரசாங்கத்தின் இத்தகைய தவறான பொருளாதாரக் கொள்கையால் மோசமாகப் பாதிக்கப்படவுள்ளதென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் அரசாங்கம் நடந்துகொள்வது பொருளாதார நிபுணர்களின் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் அரசாங்கம், அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளைத் தெரிந்திருந்தும் - அவ்வாறு செயற்படாமல் தனது பிடிவாதப் போக்கிலேயே இருந்து வருகிறது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால் நிதியுதவி வழங்கத் தயார் என்று ஏற்கனவே உதவி வழங்கும் நாடுகள் அறிவித்திருக்கின்றன. அதன்படி பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் தாமதித்து வருகிறது.

இப்போதுகூடப் புலிகள் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு புதிய யோசனைகளைச் சமர்ப்பித்திருந்தாலும், அதற்கு இணங்கிவர அரசாங்கம் தயாரில்லை. இப்படிப்பட்ட நிலையில் சமாதான நிதியுதவி மூலம் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதென்பது சாத்தியமில்லை.

இந்த நிலையில் அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி எழுகிறது அடுத்த வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புக்காக 5630 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கும், துண்டுவிழும் தொகையான பெருமளவு நிதியை ஈடுசெய்யவும் அரசாங்கம் என்ன செய்யப்போகிறது?

இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கடன்கள், நாணய வெளியீடு என்று அரசாங்கம் இறங்கினால் அதன் பாதக விளைவுகளால் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ந்தெழக்கூடிய நிலையையே தோற்றுவிக்கும்.

# நாடும் நடப்பும்




# ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பினால்

# இடைக்கால நிர்வாக அடிப்படையில் பேசலாம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



ஜனாதிபதி சந்திரிகா விரும்பினால், தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் மீளவும் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என, ஜே.வி.பியின் பிர சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பி.பி.ஸி சிங்கள சேவையான சந்தேசியவுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேச இத்தைசி எனப்படும் தேசப்பற்றாளர் இயக்கத்தின் பிரசார நடவடிக்கைகளுக்காக விமல் வீரவன்சவும், எல்லே குணவன்சவும் லண்டனுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு அவர் பல கூட்டங்களில் இலங்கையின் நிலவரம் குறித்து தமது கருத்துக்களைத் தெரிவித்தார். இதனிடையெ விமல் வீரவன்ச சந்தேசியவுக்கு வழங்கிய பேட்டியில் -

ஜனாதிபதி சந்திரிகா- ஜே.வி.பியின் ஆட்சேபனையைப் பற்றிப் பெரிதுபடுத்தாவிட்டால், அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். சில ஊடகங்கள் ஜனாதிபதி இடைக்கால தன்னாட்சியை அடிப்படையாகக் கொண்டு, பேச்சு நடத்த விரும்புவதாகத் தெரிவித்த செய்திகளை மட்டும் பிரசுரித்து வருகின்றன.

ஜனாதிபதி அவ்வாறு இடைக்கால தன்னாட்சியை அடிப்படையாகக் கொண்டு, பேச்சு நடத்த விரும்புவாராக இருந்தால், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் ஏன் வெறுங்கையுடன் திரும்பினார்.

ஜே.வி.பி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தடையாக உள்ளதாகவும், அதற்காக அந்தக் கட்சி மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். ஆனால் ,ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் காலத்திலிருந்து ரணில் விக்கிரமசிங்க வரை போர் நிறுத்த உடன்படிக்கையைச செய்து கொண்டது வரையான பிழைகளுக்காக, ஐக்கிய தேசியக கட்சி மன்னிப்புக் கோரவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தா் (01)

# சுவிஸ் திரைப்படவிழா பல்கலையில் ஆரம்பம்

ஆசிரிய திரைப்பட மையம் - சுவிஸ் பிலிம்ஸ் மற்றும் இலங்கை சுவிற்சர்லாந்து தூதுவராலயம் என்பவற்றுடன் இணைந்து வழங்கும் சுவிஸ் திரைப்பட விழா - இன்று மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காண்பிக்கப்படவுள்ள கொலண்டா கொலாவின் இயக்கத்தில் உருவான **Across the Border** திரைப்படமும், நாளை - பற்றீசியா பீள்ட்னாவின் இயக்கத்தில் உருவான **A Little colour** திரைப்படமும் காண்பிக்கபபடவுள்ளது.

இது தனது கணவரால் தொடர்ந்து அடித்துத் துன்புறுத்தப்பட்டு வரும் ஒரு சிகையலங்கார கலைஞரின் கதையாகும். அவளுடைய கணவன் பிரான்ஸிஸ் சகிப்புத் தன்மையற்ற வன்முறை இயல்பு கொண்ட ஒருவனாக இருந்து வருவதுடன், அவளுடன் அடிக்கடி சண்டையிட்டும் வருகிறான். அவள் தனது கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டு, வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கின்றாள் என்பதே **A Little colour** திரைப்படத்தின் கதைச்சுருக்கமாகும்.

# லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு புதிய நியமனம்

லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு புதிய ஆணையாளர்களை நியமிக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்காக எதிர்வரும் 22 ஆம் திகதி அரசியலமைப்புச் சபை கூடவுள்ளது.

தற்போது லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவில் அங்கம் பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும டிசம்பர் மாதம் 14 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்த நிலையில் புதியவர்கள் மூவர் எதிர்வரும் 22 ஆம் திகதி நியமிக கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவோரில் இருவர், இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர்களாகவோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாகவோ இருக்க வேண்டும் என்பது நியதியாகும்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு - உயர் நீதிமன்றத்துக்கு ஈடான அதிகாரத்தைக் கொண்டிருப்பதன் காரணமாகவே அதற்கு இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# 46000 வீடுகள் புனரமைக்க உலக வங்கி நிதி உதவி!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 46 ஆயிரம் வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு, நிதி உதவி வழங்க உலகவங்கி கொள்கையளவில் இணங்கியுள்ளது. இந்த வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் - 80வீதம் முழுமையடைவதற்கு, பயனாளிகளுக்கு உச்சமாகத் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நன்கொடையாகவும், 20 வீதமான வீடுகளைத் திருத்துவதற்கு பயணாளிகளுக்குத் உச்சமாக தலா 70 ஆயிரம் ரூபாவை நன்கொடையாகவும் வழங்கும் திட்டமாகும்.

யுத்தத்தால் அழிவடைந்த, சேதமடைந்த வீடுகளின் இழப்பு மதிப்பீட்டின் அடிப்படையிலும், உள்ள நிதி ஒதுக்கீட்டின் உச்ச அளவுகளின் அடிப்படையிலும் யாழ். மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டிலிருந்து 4 வருட காலத்தினுள், முதலாம் வருடம் 1448 வீடுகளும், இரண்டாம் வருடத்தில் 3620 வீடுகளும், 3 ஆம் வருடத்தில் 4706 வீடுகளும்,4ஆம் வருடத்தில 4706 வீடுகளையும் மொத்தமாக - 14480 வீடுகளைக் கட்டி முடிப்பதற்கும், திருத்தம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றில் 80 வீதமான வீடுகளைப் புதிதாகக் கட்டுவதற்கும், 20 வீதமான சேதமடைந்த வீடுகளை புனர்நிர்மாணிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தச் செயற்திட்டத்தை மாவட்ட ரீதியாக ஒருங்கிணைப்பதற்கு மாவட்ட செயறபாட்டுக குழு ஒன்று, அரசாங்க அதிபர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும இந்த அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பகுதி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவை அலுவலகர்களுக்கும் முழுமையாக அழிக்கப்பட்ட வீடுகள் மற்றும் சேதமடைந்த வீடுகள் அதற்குரிய படிவங்களில் நிரப்பப்பட்டு, அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பிரதேசசெயலருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (17)

நேர்காணல் - தமிழில் - வல்வையூரான்

# கண்டி யாத்திரையை நிறுத்திய இம்புல்கொட வீரயா!



எஸ்.பி.பண்டாரநாயக்க

**எஸ்.**பி.பண்டாரநாயக்க கம்பஹா மாவட்டத்தைத் தனது தேர்தல் தொகுதியாகப் பிரகடனப்படுத்தி, அனைத்துத் தேர்தல்களிலும் தனது தொகுதியில் வெற்றி பெற்றார். அந்தத் தொகுதியில் உயர்ந்த அளவில் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், முதற் தடவையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூலம் போட்டியிட்ட, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர் என அறிமுகப் படுத்தினால் அது தவறன்று.

இலங்கை அரசியலின் சின்னம் போன்றவர் என்று சொன்னால் அது பொய்யாகாது. இன்று 88 வயதினைக் கடந்துவிட்ட இம்புல்கொட வீரயா என மற்றுமொரு பெயரால் அழைக்கப்படுகின்ற எஸ்.பி.பண்டாரநாயக்க இம்புல்கொட என்ற இடத்தில் செய்த கெட்டித்தனத்தின் சுவையான அனுபவத்தைத் தெரிந்து கொள்வதற்காக இன்று யக்கலவில் அமைந்துள்ள மடுகஸ் வளவு என்ற பெயரை உடைய இல்லத்துக்குச் செல்வோமா?

மடுமரம் என்பது அலங்காரத்துக்குப் பயன்படுத்தப்படும் ஒரு செடி. அந்த மடுமரங்களின் வரிசையின் ஊடாக தலதா மாளிகைக்கு வாகனத்தில் போகலாம். இப்படி பாதயாத்திரை சென்றால் அடித்துக் கொல்வார்கள். பிறேமதாசாவும் அந்த இடத்தில் இருந்தார். அவரது பிழையுமல்ல. நல்லதொரு ஆலோசனையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும்போது எதிர்க்கட்சியினர் எதிர்ப்பார்கள். இதுதான் எங்களது சம்பிரதாயம். இம்புல் கொடவுக்கு அப்பால் குறுகிய பாதை ஒன்றின் மூலம் நாங்கள் உள்ளே சென்றால், பழைய பெருமை உரியதெனச் சொல்லப்படும், இல்ல நிர்மாணக் கலையின் மன மகிழ்வூட்டும் ஓவியம் என வர்ணிக்கக்கூடிய மடுகஸ் வளவினை நாம் அடைய முடியும்.

லொக்கு மாத்தையா என அழைக்கப்படுகின்ற எஸ்.பி.பண்டாரநாயக்காவை சந்திப்பதற்கு வழக்கம் போல வந்திருந்த அந்தக் கிராம மக்களின் மத்தியினூடாக நீண்ட பெரிய மண்டபத்தினுள் நுழைந்தோம்.

அந்த இடத்தில் செய்திப் பத்திரிகைக் குவியலோடும், பதிவேட்டுக் குவியலோடும் சிறிய மேசையில் அவற்றைப் பரப்பி வைத்த வண்ணம் ஒரு ஆசனத்தில் இம்புல் கொட வீரயா அமர்ந்திருந்தார். மீண்டும் மீண்டும் இம்புல்கொட வீரயா இம்புல்கொட வீரயா என்று கூறுகிறாரே. அந்த இம்புல் கொடவுக்கும், வீரத்துக்கும் பண்டாரநாயக்காவுக்கும் என்ன தொடர்பு என நீங்கள் முடியைப் பிய்த்துக் கொள்வீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

முடியில்லாதவர்கள் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். இன்றும் இளமைத் தோற்றத்தோடு காட்சியளிக்கும் அவர் பற்றியும் இற்றைக்கு 46 வருடங்களுக்கு முன்னால் அவரது வீரம் பற்றி கெட்டித்தனம் பற்றியும் முழுநாடுமே அறிந்திருந்தது. அவை பற்றி இந்த இம்புல்கொட வீரனின் வாயாலே கேட்டுத் தெரிந்து கொள்வோம்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புக் காட்டியது. அவர்கள் எதிர்ப்பைக் காட்டியதுடன் மட்டும் நின்றுவிடாது, 1958 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி கொழும்பில் இருந்து கண்டி தலதா மாளிகைக்கு பாதயாத்திரையை ஆரம்பித்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர்கள் உட்பட, பொது ஜனக் கூட்டம் விக்டோரியாப் பூங்காவில் ஒன்றுகூடியது. பாதயாத்திரை ஆரம்பமாவதற்கு முதல் நாள் அதாவது, 1958 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் திகதி பிரதமர் தனது அலுவலகத்துக்கு என்னை அழைத்தார். நாளை ஐக்கிய தேசியக் கட்சியினர் கொழும்பில் இருந்து கண்டிக்குப் பாதயாத்திரை செய்கிறார்கள். நீங்கள் சென்று எப்படியாவது அந்தப் பயணத்தை நிறுத்த வேண்டும் என பிரதமர் கூறினார். அந்தக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டில் இருந்த பிரதான கட்சியாக - மிகப் பெரிய மக்கள் பலத்தோடு இருந்தது.

டட்லி சேனநாயக்க மட்டுமல்ல, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் சுதந்திரக் கட்சியைக் கட்டி யெழுப்புவதற்கு முன்னர், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தபடியால் அது பிரபல் கூட்டத்தவரின் நாட்டுக்கு வேலை செய்கின்ற கட்சி என்றவாறு மக்கள் விருப்பைப் பெற்றிருந்தது.

பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக கொழும்பிலிருந்து புறப்படும் யாத்திரையை நிறுத்திப் போடுவது என்பது அந்தளவுக்கு இலகுவான காரியம் அல்ல என்பதை எஸ்.பி. பண்டாரநாயக்க தெரிந்து கொண்டார். எந்தளவு கடினமான காரியமாக இருந்தாலும், தான் செய்யப் போகும் செயலின் சவாலை அவர் உணர்ந்திருந்தார். அந்தக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிதான் எதிர்க்கட்சி. என்னிடம் 1ஸ்ரீ 1961 இலக்க பொக்ஸ்வகன் கார் ஒன்றிருந்தது. அது பிரதேச வாதிகள் பணம் கொடுத்து எனக்கு வாங்கிக் கொடுத்த வாகனம். அதன் பெறுமதி 7500 ரூபாவோ என்னவோ எனக்கு ஞாபகமில்லை.

பாதயாத்திரை நிறுத்துவதற்குப் பொருத்தமான இடம் எதுவென்று பின்னர் நான் ஆராய்ந்து பார்த்தேன். முழுமையாக ஆராய்ந்து பார்க்கும் போது, ஒரு இடம் இருபக்கமும் உயர்ந்த கூரைகள். இரண்டினால் சூழப்பெற்று மத்தியில் ஒரு துவாரம் இருப்பதைக் கண்டேன். கொழும்பில் இருந்து வரும் பாதயாத்திரையைத் தடுத்து நிறுத்த நாங்கள் தேர்ந்தெடுத்த இடம்தான் இம்புல்கொட சந்தி.

இடம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், பாதயாத்திரை பற்றி விபரம் திரட்ட உளவாளி ஒருவரை அனுப்பினோம். ஐக்கிய தேசியக் கட்சியின் பாதயாத்திரை கடவத்தையை அண்மித்தது. அந்தக் கட்சியைச் சேர்ந்தவரின் இல்லமாகிய வீரசேகர வளவில் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி தங்கிக் கொண்ட உளவாளி திருட்டுத்தனமாகச் சென்று சரியான தகவல்களைப் பெற்றார்.

அந்தக்கணமே மடுகஸ் வளவுக்கு வந்து, பண்டாரநாயக்காவிடம் உண்மை பற்றித் தெரிவித்திருந்தார். வீரசேகர வள்வுக்கு அனுப்பிய உளவாளிகள் எங்களிடம் தகவல்களைத் தெரிவித்தனர். இதனால் ஒக்ரோபர் 3 ஆம் திகதி அவர்கள் வீரசேகர வளவில் இருந்து வெளியேற இருந்தது தெரிய வந்தது. அதன்படி நாங்கள் மடுகஸ் வளவில் இருந்து புறப்பட்டது சரியாக 4.30 மணிக்கு நானும், இன்னும் பதினொரு பேரும் சென்றோம். மிகப் பெரிய பாதயாத்திரிரையை நிறுத்துவதற்கு நாம் புதிய வெடிகுண்டைத் தயாரித்தோம். பண்டாரநாயக்க இரு பக்கத்துக்கும் 25 வீதம் வெறும் வெடிகுண்டுகளை எடுத்துச் சென்றோம். நான் தெரு மத்திக்கு வந்து கொண்டிருந்தேன். எங்களது வைத்தியர் என்.பி. சந்திரசேனாவும் அவரது ஒஸ்ரின் காரில் அந்த இடத்துக்கு வந்தார். இலங்கையின் முதலாவது வைத்தியராக வாக்களிப்பின் மூலம் தெரிவான அந்தப் பெருமகன் இன்று இல்லை. நாங்கள் இம்புல்கொட சந்தியின் தெருவில் இருபக்கமும் ஒளிந்திருந்தோம். பாதயாத்திரை வந்தவுடன் வெடிகுண்டுகளை வீசினோம். (அவர் மீண்டும் சிரிக்கிறார்.) அவர்கள் இருபுறமும் வெடிகுண்டுகள் விழும்போது, உண்மையான வெடிகுண்டென அவர்கள் நினைத்தார்கள். ஆகையால் ஊர்வலத்தில் வந்தவர்கள் சிதறி ஓடினார்கள். கண்டிக்கான பாதயாத்திரை அந்த இடத்திலேயே முடிவடைந்தது. பின்பு நாங்கள் எல்லோரும் கீழே சென்றோம். காலை 10 மணியளவில் அங்கிருந்த பொலிஸ்மா அதிபர் இந்த நிகழ்வைப் பார்த்துக் கொண்டு நாலா பக்கமும் சென்றார். அப்பொழுது இந்த இடத்தில் இலட்சத்துக்கும் அதிகமான கூட்டம் நிரம்பி இருந்தது. பொலிஸ்மா அதிபர் நுகேகொட சந்திக்கு வந்தார். நாங்கள் பாதயாத்திரைக்கு வந்தால், இரு பக்கமும் அடித்துக் கொன்றுவிடு வார்கள் என்று நான் பொலிஸ்மா அதிபரிடம் காரணங்களைத் தெளிவுபடுத்தினேன். இங்கு பொலிஸ்மா அதிபர் பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களை கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டார். அவர்கள் வாகனங்களில் ஏறிச் சென்றார்கள். அதற்குப் பின்னர் நாங்கள் நடந்து வரத் தொடங்கினோம். இடைநடுவில் யக்கல பன்சலவுக்குச் சென்றோம். பிக்குகளின் பிரித்தோ தலைக் கேட்டுவிட்டுச் சந்திக்கு வந்தோம். அப்பொழுது பிரதேச வாதிகள் யக்கல சந்தியில் கூட்டமாக நின்றார்கள். நான் எனது காரில் ஏறினேன். ஐக்கிய தேசியக் கட்சியின் பாதயாத்திரையை நிறுத்தியதன் காரணத்தை அவர்களுக்குக் கூறினேன். இன்று எனது வொக்ஸ்வாகன் கார் கராச்சில் நிற்கிறது.

எப்படியாயிற்று? 1957 ஆம் ஆண்டில் சமஸ்டியை வழங்கியிருந்தால், இன்று இந்த யுத்தம் இருந்திருக்காது. அவர்கள் சாதாரண சமஷ்டி முறையையே சமர்ப்பித்தார்கள். அது நிகழ்ந்திருந்தால், கடந்த 20 வருடங்களாக நிகழ்ந்த இந்த யுத்தம் இன்று இருந்திருக்காது. சமாதானக் குழு, அது இது என்று எதுவுமே வந்திருக்காது என்கிறார் அவர்.

*- நன்றி: 'லங்கா தீப'*

சமயம்.. மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

# எந்த வரம் வேண்டி கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கிறோமோ அந்த வரமதை கந்தப் பெருமான் தருவான்

கந்தக் கடவுளை நினைத்து தவமாற்றும் விரதம் மூன்று. அவை வார விரதம் செவ்வாய், வெள்ளி, நட்சத்திர விரதம் கிருத்திகை, திதிவிரதம் சஷ்டி. சஷ்டி நோன்பில் இந்த ஆறு நாட்களிலும் மனம், மொழி, மெய்களால் முருகப் பெருமானை மெய்யன் போடு பூசித்து வழிபடுகின்ற தலையாய நோன்பு கந்தசஷ்டி விரதமாகும். இந்துக்கள் பெரும்பாலானவர்களால் அனுஷ்டிக்கின்ற விரதமும் இதுதான்.

முருகன் சூரனை சம்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே கந்தசஷ்டி விழாவாகும். இறைவனது கருணை- அறக்கருணை, மறக்கருணை என இரு வகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும், பொல்லாதவர்களை மறக்கருணையாலும் இறைவன் ஆட்கொள்கின்றான். சூரன் அழியாத பல வரங்களைப் பெற்று, எல்லோருக்கும் இடுக்கண் புரிந்தான். அவன் மீண்டும் பாவம் செய்யாமல் தடுக்கவும், அவனுக்கு முக்தியளிக்கவும், அவனை இரு கூறாக்கி மயிலும் சேவலுமாக மாற்றினார்.



முருகன் மயிலைத்தன் வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டார். இதிலிருந்து முருகன் சூரனை மறக் கருணையில் ஆட்கொண்டது வெளிப்படுகிறது. இது சிவஞான சித்தியாரில் வரும்பாடல்.

"தந்தை தாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ் சொலாற்றின்
வந்திடாவிடில் உறுக்கில் வாரினால் அடித்துத் தீய
பந்தமும் இருவரெல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்
இந்த நீர் முறைமையன்றோ ஈசனார் முடியுமென்றும்"

எனக் குறிப்பிடுகின்றது.

பெற்றோர் தம் பிள்ளைகளிடம் நோய் ஒன்று கண்டாலே, தாமே அந்தநோயை மாற்ற வேண்டியதைச் செய்கிறார்கள். கத்தியால் அறுத்தும், கடுந் துன்பம் செய்வித்தும் அதனைப் போக்குகின்றார்கள். இந்தச்செயல் அவர்களுக்குப் பிள்ளைகளிடமுள்ள அன்பைக் காட்டுகிறதா? பகைமையைக் காட்டுகிறதா? அன்பையல்லவா காட்டுகிறது. அதுபோல நம்மிடம் பற்றிய பாவங்களைத் தீர்க்க இறைவன் கருணையால் இம்மாதிரியும் செய்கிறான்.

இந்த தத்துவார்த்த சிந்தனைகளை உணர்ந்து எழுந்ததே கந்தபுராணம். கந்தபுராணக் கடவுள் முருகன் சூரனை சம்கரித்த திருநாளே "சஷ்டி" "சஷ்டியிலிருந்தால் அகப்பையில் கிடைக்குமென்பது" கூட முதுமொழியாகும். இந்த விரத நாட்களை பூரணமாக அனுஷ்டித்து வருகின்ற பொழுது, நாம் எதை எதை எம் பெருமானிடத்தில் வேண்டுகின்றோமோ அவையவை அப்பொழுது கிடைத்து விடுகின்றது என்பது கண்கூடு.

வேலும் மயிலும் சேவலும்

"வெல்வது வேல்" வேல் என்பது ஆயுதமல்ல, எல்லாவற்றையும் வெல்வது எனப் பொருள்படும். அறிவுதான் எல்லாவற்றையும் வெல்லும். ஆயுதம் வெல்லாது. ஞானம் தான் வெல்லும். ஆகவே கூர்மை அடிப்பகுதி சூழ்ந்தும், இடைப்பகுதி அன்றும், நுனிப் பகுதி கூர்மையாக இருப்பது வேல். சூரபத்மனின் ஒரு பாதி "நான்" என்ற அகங்காரம், மற்றொரு பாதி 'எனது' என்ற மமகாரம் அவைதான் மயிலும் சேவலுமாக உருவெடுத்து, முருகனை எதிர்க்க வந்தது. முருகன் திருவருட் பார்வையால் சூரபத்மன் பகைமை நீங்கி ஞானம் பெற்றான். மயில் முருகனுக்கு வாகனமாகியது. சேவல் கொடியானது.

இத்தரு பெருமையுடையவன் முருகன் சிவனாயும், சக்தியாயும் பிரிந்தது. ஒரே பரம்பொருள். பிரிந்த இருவரும் அன்பில் ஒன்றுபட்டு எழுந்த ஜோதி முருகப்பெருமான். அக்கினியும் தாங்க முடியாதது. அந்த ஜோதி சிவபெருமான் அக்கினியையே வீரியமாக உடையவர். ஆனால் அந்த அக்கினி வெறும் அக்கினியல்ல, அக்கனி பகவான் தாங்கிய அக்கினியே, முருகப் பெருமான் ஆறு பொறிகள் ஒன்றிய ஒரு ஜோதியுருவம், ஆறுமுக உருவம், கார்த்திகைகளாம் ஆறு தாயார்கள் வளர்த்தது. தூயகங்கையாம் ஆறு தாங்கிய ஜோதி, சரவணப் பொய்கையில் தோன்றிய "சரவணபவ" எனும் ஆறு எழுத்தைக் கொண்ட மந்திர மூர்த்தி, ஆறுதலைக் கொடுக்கும். ஆறுமுகம், ஆறு படைவீடன், ஆற்றுப்படையுடையான், சமநிலையாம், துலா ராசியில் தராசு முனை, வளர்ப்பிறை ஆறாவது திதியாகிய சஷ்டியன்று, அவனது வெற்றி நாள். அரக்கராம் புறப் பகைவரையும் அறுவராம். அகப் பகைவரையும் வெற்றிகொண்ட ஆறுமுகனை "நான் வேறு எனாதிருக்க நீ வேறு எனாதிருக்க" ஏக போகமாய் சுகவாழ்வு வாழ ஆறாம் திதியில் வழிபடுவோம்.

# தரம்-1 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் தரம் 1க்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தரம் 1 இல் அனுமதி பெறும் மாணவர்களின் புகுநிலைத் திறன்களை அறிவதற்காகவும், புதிதாக அறிமுகம் செய்தபுகு நிலைத் திறன்களை மதிப்பீடு செய்வதற்குமாகவே ஆசிரியர்களுக்கு இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையிலும் செயலமர்வு நடைபெறவுள்ளது என யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது "ஆஅவ" கடன் இல. 2043 – SRI (SF)

## கேள்வி அறிவித்தல் இல: 35

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக் கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | AM/CAARP/HS/11 | திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் 40 படுக்கைகள் கொண்ட பெண்கள் விடுதி நிர்மாணம். | M6 (கட்டடங்கள்) | 61,000/= |
| 02 | AM/CAARP/HS/11 | திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் ஆண்கள் விடுதி, மகப்பேற்று விடுதி மற்றும் சமையலறை ஆகியவற்றின் திருத்தவேலை. | M7 (கட்டடங்கள்) | 35,000/= |
| 03 | MU/CAARP/RD/01 | ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 0-2 கிலோ மீற்றர். | M7 (நெடுஞ்சாலை) | 40,000/= |
| 04 | MU/CAARP/RD/01 | ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 2-4 கிலோமீற்றர். | M7 (நெடுஞ்சாலை) | 40,000/= |
| 05 | VA/CAARP/RD/01 | கனகராஜன்குளம் நெடுங்கேணி வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 0-2 கிலோமீற்றர். | M7 (நெடுஞ்சாலை) | 53,000/= |
| 06 | VA/CAARP/RD/01 | கனகராஜன்குளம் நெடுங்கேணி வீதியில் கிரவல் பரப்பி உறுதியாக்கி தார் போட்டு மணல் பரவுதல் 2-3.5 கிலோமீற்றர். | M7 (நெடுஞ்சாலை) | 31,900/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ந் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாக பதிவுசெய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்து முடித்தவர்களாக இருக்க வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, **55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலையில** பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி **026 - 2227434**, தொலைநகரி **026 - 2227401**, மின்னஞ்சல் necord@sltnet.lk).

06. ஒப்பந்த ஆவணங்களை 2004 கார்த்திகை 12 இல் இருந்து 2004 கார்த்திகை 25 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்திக் கொள்வனவு செய்யப்படலாம்.

07. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

08. அவ்வவ் வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் **தலைவர், கேள்விச்சபை,** NECORD, **55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற முகவரிக்கு 2004 மார்கழி 03 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

09. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 கார்த்திகை 25 முற்பகல் 11.30 க்கு NECORD, **55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற முகவரியிலுள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமாட்டார்.

**த. லங்காநேசன்,**

**கேள்விச்சபை தலைவர்,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம்,**
**55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை.**

(C/3368)

# மாவோ கிளர்ச்சிவாதிகளுடன் நேபாளப் படையினர் மோதல்!



நேபாளப் படையினருக்கும், மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் நேபாளத்தின் இரண்டு மாவட்டங்களில் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மோதலில் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் வெளிவராதபோதிலும் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் டாடிங் மற்றும் கைலாமி ஆகிய இரண்டு மாவட்டங்களிலுமே இந்த மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. தலைநகர் காத்மண்டுவிற்கான பிரதான வீதியை மீளத்திறப்பதற்கு டாடிங் மாவட்டத்தில் படையினர் முயன்றவேளையே இந்த மோதல் இடம்பெற்றதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - நேபாளத்திற்கு வழங்கும் உதவிகளை நிறுத்துமாறு சர்வதேச உதவிவழங்கும் நாடுகளிடம் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளின் சிரேஷ்ட தலைவரான பிரட்கன்டா கேட்டுள்ளார்.

அத்துடன் இவர்களின் உதவிகள் நேபாள மக்களுக்குச் செல்ல வேண்டுமெனவும், நேபாள அரசுக்கான நிதி, இராணுவ, அரசியல் மற்றும் ஜனநாயக ரீதியான உதவிகள் உடன் நிறுத்தப்படவேண்டுமெனவும் தெரிவித்தார்.




# அமெரிக்க வெளியுறவுச் செயலராக கொண்டோ லீசா நியமிக்கப்பட்டார்!

## றிச்சட் ஆர்மிரேஜும் பதவியிலிருந்து விலகினார்



அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின்பவல் தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து அவரது இடத்திற்கு அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த கொண்டோலீசாறைஸை ஜனாதிபதி புஷ் நியமித்துள்ளதாக வொஷிங்ரனிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க வரலாற்றிலேயே முதலாவது கறுப்பினப் பெண்மணியொருவர் வெளியுறவுச் செயலராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையென தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி புஷ்ஷிற்கு மிகவும் நெருக்கமானவர் கொண்டோலீஸா என தகவல்க்ள் தெரிவிக்கின்றன. அத்துடன் இவர் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டுள்ளவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர் புஷ்ஷின் இந்தப் புதிய நியமனங்கள் அவரது இரண்டாவது பதவிக் காலத்தில் அவரது நிர்வாகம் எவ்வாறான வழியில் செல்லவுள்ளது என்பதனை எடுத்துக்காட்டுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் பதற்றத்தை குறைப்பதற்கும் மத்திய கிழக்குப் பிரச்சனையில் இராஜதந்திர ரீதியில் செயற்பட்டதற்காகவும் கொலின்பவலை ஜனாதிபதி புஷ் பாராட்டியுள்ளார்.

கொலின் பவல் எமது காலத்தில் உயர்ந்த பொதுமக்கள் சேவகன், இராணுவ வீரன், சிறந்த இராஜதந்திரி, நாட்டுப்பற்றாளர் எனவும் புஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கொலின் பவலுடன் சேர்த்து எரிபொருள் அமைச்சர் ஸ்பென்சர் ஆபிரகாம், விவசாய அமைச்சர் ஆன் வெனிமேன், கல்வி அமைச்சர் ராட்பேக் ஆகியோரும் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

இதனிடையே - நேற்றையதினம் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலராக இருந்த றிச்சட் ஆர்மிரேஜும் தனது பதவியிலிருந்து விலகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

# மொசூல் நகரைக் கைப்பற்ற அமெரிக்கப் படைகள் விரைவு!

(மொசூல்)

ஈராக்கியத் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மொசூல் நகரினை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் முகமாக அமெரிக்க ஈராக்கிய கூட்டுப்படைகள் பாரிய தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

மொசூல் நகரத்தினைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்த தீவிரவாதிகள் அங்கிருந்த பொலிஸ் நிலையங்கள் மற்றும் ஈராக்கிய தேசிய காவற்படையினரின் முகாம்களைக் கைப்பற்றி அவற்றில் நிலைகொண்டிருந்தனர்.

இதனை அடுத்து பலூஜா நகரில் இருந்து 500 அமெரிக்கப் படையினர் கடந்த சனிக்கிழமை மொசூலிற்கு அனுப்பப்பட்டிருந்தனர். தற்பொழுது மேலும் 500 படையினர் மொசூல் நகரத்திற்கு அனுப்பப்பட்டுத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


## முக்கிய அறிவித்தல்

யாழ் வன்னி மக்களுக்கு,

ஏசியன் கம்பியூட்டர் சிஸ்டம், மற்றும் ஏசியன் பிசினஸ் கொலிஜ் ஆகிய நாம் கணினி மற்றும் கணக்கியல் கல்விச்சேவையை ஆற்றிவருவது நீங்கள் அறிந்ததே. எமது நிறுவன பெயரை பயன்படுத்தி இங்கிலாந்தில் உள்ள தனியார் ஒருவர் சாவகச்சேரி பிரமுகர் மூலம் வியாபாரம் ஒன்றை நடத்தி வருவதாக நாம் பொது மக்களிடமிருந்து அறியப்பெற்றோம்.

மேற்குறிபிடப்பட்ட நபருக்கும் அவர்களால் நடத்தப்படும் வியாபாரத்திற்கும் ஏசியன் நிறுவனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குனர்,
ஏசியன் கம்பியூட்டர் சிஸ்டம்,
ஏசியன் பிசினஸ் கொலிஜ்,
கொழும்பு.

200, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை
கொழும்பு -13

(C/3371)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கூட்டமைப்பு தலைமைச் செயலகத்தை திருகோணமலையில் திறக்கத் தீர்மானம்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலையில் சகல விடயங்களும் ஆராயப்பட்டதென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றைய தினம் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின்னர் - ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமீபகால நிகழ்வுகள், சமீபகால சந்திப்புக்கள், எடுக்கப்பட்ட முடிவுகள் அது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு உட்பட பல விடயங்கள் சம்பந்தமாக எமக்குத் தகவல் தரப்பட்டது.

தற்போது நடைபெறும் பல விடயம் தொடர்பாக சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டு ரீதியாகவும், அரசாங்கத்தின் பங்காளிகளாக இருக்கும் சில கட்சிகளின் செயற்பாடுகள், அவர்களின் நடவடிக்கைகள், அதன் காரணமாக அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் அரசாங்கம் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியாமைக்கான காரணங்கள் என பல விடயங்கள் குறித்து நாம் கருத்துப் பரிமாறியிருக்கிறோம்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக எங்களுக்கும் ஒருமித்த ஒற்றுமையான கருத்துக்கள் நிலவுகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலமாக தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்காண வேண்டுமென்பதில் நாம் அனைவரும் உறுதியாக உள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளும் உறுதியாக உள்ளனர்.

ஆனால், இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை தற்போது முன்னெடுக்க முடியாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் அரச தரப்பில் தான் உள்ளது. எனவே இந்த விடயத்தில் அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களும் அக்கறை செலுத்தி அழுத்தமான ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும்.

ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டிய நிலைமை வேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்தாகும். இந்தக் கருமங்களில் நாங்கள் தீவிரமாகச் செயற்படுதவற்கு சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

இதன்படி மாவட்ட ரீதியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகங்களைத் திறப்பதற்கு நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். இதன்முதற்கட்டமாக திருகோணமலையில் தலைமை அலுவலகம் திறக்கப்படும். அதன் பின்னர் - பிற மாவட்டங்களிலும் அலுவலகங்கள் திறக்கப்படும்.

திருமலையில் கூட்டமைப்புக்கு ஒரு செயலகம் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒரு குழுவையும் நியமித்திருக்கின்றோம். இதேபோன்று - ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய செயலகங்கள் [illegible]மைக்கப்படவுள்ளன எனவும் [illegible]வித்தார்.

## அனுராதபுரவில்...

நிறுத்துமாறு. ஒளிச்சமிக்கை காட்டப்பட்டது.

இதற்குமுன்னர் அநுராதபுரத்தில் பல இடங்களில் பொலிஸார் பரிசோதனை செய்ததால் அச்சமடைந்த சாரதி வழிப்பறி கொள்ளையர்கள் தடுத்து நிறுத்துவதாகக் கருதி தொடர்ந்தும் வாகனத்தைச் செலுத்தியபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன்போது வானின் பின்புறத்தில் இருந்து சென்ற மேற்படி குடும்பஸ்தர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் உயிரிழந்தார்.

இறந்தவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையிலிருந்து நேற்றிரவு கோண்டாவிலுக்கு எடுத்து வரப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடம் பொலிஸாரின் வாகனச் சோதனைக்காக வீதித் தடைமுகாம் அமைத்து கடமையில் ஈடுபட்டு வருவதாகவும், துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அன்றையதினம் கடமையிலிருந்த மூன்று பொலிஸாரைத் தாம் கைது செய்ததாக வவுனியா நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஜேர்மனியில் வசித்துவந்த தனது மருமகன் சிவகுமாரையும் பேரப்பிள்ளையையும் யாழ்ப்பாணம் அழைத்து வந்துகொண்டி[illegible] வேளையே இந்தச் சம்பவ[illegible]ம்பெற்றதாக தெரியவருகிற[illegible]

## இந்த மாதத்தில்...

புலிகள் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பல்வேறு முடிவுகளை எடுத்துள்ளனர். பேச்சு மேசைக்கு வராமல் பல்வேறுபட்ட காரணங்களை கூறி வருகின்றனர்.

நோர்வே அனுசரணையாளர்கள் வந்துசென்றதன் பின்னர் ஜனாதிபதி இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கத் தயாரென்றால் தாம் அடுத்த நாளே பேச்சுக்கு வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார். வருமாறுதான் நாம் அழைப்பு விடுக்கின்றோம். ஆனால் பின்னர் சந்திரிகா ஜனாதிபதியாக இன்னும் ஒரு வருடமே இருப்பார். ஆனபடியால் நாம் எவ்வாறு அவருடன் நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசுவது எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் எமக்கு இடைக்கால நிர்வாகம் மட்டுமே தந்தால்போதும் ஏனெனில் ஒரு வருடத்துக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. தீர்வு காண்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் இல்லை. அதற்கு ஐக்கிய தேசியக் கட்[illegible] உடன்படப் போவதில்லை [illegible]வும் தெரிவித்துள்ளனர்.

நாங்கள் கூ[illegible]ன்றோம் இவை ஒன்றும் பாரிய பிரச்சினை அல்ல. நீங்கள் முதலில் பேச்சுக்கு வாருங்கள். ஏனையவற்றை நாங்கள் செய்கிறோம். விடுதலைப் புலிகள் இவ்வாறு நாளுக்கு நாள் கூறும் காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

இனப் பிரச்சினை தொடர்பாக நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் முதற்தடவையாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கின்றன. நான் தலைமைதாங்கும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே உடன்பாடு இல்லையென விடுதலைப்புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் சகல கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டை கொண்டுள்ளன. அவற்றின் தலை[illegible] என்ற முறையில் பேச்சுக்க[illegible] ஆரம்பிப்பதற்கு விரும்புகிறேன்.

நான் சமர்[illegible]க்க இருக்கும் வரவு செலவுத்[illegible]ம் மக்களுக்கு நன்மை அளிக்[illegible] என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்களான பி.என்.எஸ்.நாஸர் மற்றும் பி.என்.எஸ்.தாரிக் ஆகியவற்றைக் காணலாம்

## திருமலை துறைமுகத்தை....

வருவதாகப் பாதுகாப்பு அமைச்சினால் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொண்ட கண்காணிப்புக்குழு திருமலைத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதியில் புலிகள் புதிய முகாம்கள் எதையும் அமைக்கவில்லை எனத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் இந்த அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமது புலனாய்வுப்பிரிவின் தகவல்களைத் தாம் பூரணமாக நம்புவதாக தெரிவித்துள்ளார்.

தற்பொழுது திருமலைத்துறைமுகப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் தொடர்பான ஆதாரங்கள் பலவற்றையும் கண்காணிப்புக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளோம். இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை உடனடியாக மேற்கொள்வதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுதியளித்துள்ளதாகவும் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

## முள்ளிப்பாலம்...

பயணம் செய்ததன் காரணமாகவே பாலம் உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (13)

## அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக...

சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் 3 மணிநேரம் நீடித்த இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச் செல்வன்:

இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும் வழமையாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மாதாந்த சந்திப்பு ஒழுங்கிலும் சந்தித்துள்ளோம்.

இந்தச்சந்திப்பின்போது எமது அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் அண்மையில் நோர்வே உயர் மட்டக்குழு எமது தமிழீழ தேசியத் தலைவருடன் கலந்துரையாடியதும் அதில் எடுத்த தீர்மானங்களும் அதனைத் தொடர்ந்து ஜப்பான் தூதுக் குழுவுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகவும் ஐரோப்பிய நாடுகளின் விஜயத்தின் போது சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியுள்ளோம்.

ஆக்கபூர்வமான நடவடிக்கை எதிர்காலத்தில் முன்னெடுக்கப் படுவதற்கான தீர்மானங்கள் பல எடுத்துள்ளோம் பொதுவில் இச்சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்தது.

இன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி ஏதும் சொல்வீர்களா?

முக்கியமாக தற்போது இந்த சமாதானப்பேச்சுக்கள் சம்பந்தமாக ஜனாதிபதியும் அரசாங்கமும் எடுத்திருக்கும் நிலைப்பாடு தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையிலும் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பை பொறுத்த வரையிலும் மிகவும் உறுதியான நிலைப்பாட்டிலே தொடர்ந்த வண்ணம் இருக்கின்றோம். தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக் கூடிய தமிழ் மக்களுடைய ஆணையின் அடிப்படையில் எங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற வரைபின் அடிப்படையில் பேச்சு மேசைக்குப்போக தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் தொடர்ந்தும் சர்வதேச சமூகத் திற்கு தங்களுடைய நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் இது முக்கியமான முடிவு.

எமது நிலைப்பாடு குறித்து தொடர்ந்தும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்க இருக்கின்றோம். எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் பேச்சு மேசைக்கு வர - பேச்சு வார்த்தையை தொடங்க தடையாக இருப்பதாகவும் இது இழுபட்டுச் செல்வதற்கு காரணமாக இருப்பதாகவும் சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கம் பிரசாரப் படுத்திவருகின்றது.

இதில் - எந்த உண்மையும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக பேச்சுக்களை தொடங்குவதற்கும் தமிழ் மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் பேச எப்பொழுதும் தாராக இருப்பதை நாங்கள் எப்பொழுதுமே தெளிவுபடுத்தி வருகின்றோம் இந்த நிலைப்பாட்டை நாங்கள் தொடர்ந்து தெளிவாக்கி நட வடிக்கை எடுக்க இருக்கின்றோம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முழுமையாக தீவிரமாகச் செயற்பட இருக்கிறது.

*கேள்வி:* கடந்தவாரம் நோர்வே வெளியுறவு அமைச்சர் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு நீங்கள் அனுப்பிய யோசனை அல்லது குறிப்பு பற்றி கூறுவீர்களா?

*பதில்:* எமது தேசியத்தலைவர் எங்களுடைய நிலைப்பாட்டை விளக்கியதும் எந்த நிபந்தனையும் இல்லாது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை அடிப்படையாகக் கொண்டு பேசுவதற்குத் தயாராக உள்ளோம் என்பதை அரசாங்கம் தனது கூட்டுக் கட்சிகளை இந்த சமாதான முன்னெடுப்புகளுக்கு முழு ஆதரவையும் தெரிவிக்கும் வகையில், ஒன்றிணைத்து ஒருமுகப்படுத்தப்பட்ட தீர்மானத்தை எடுத்து - ஒரு நிலைப்பாட்டை அறிவிக்கும்படி நாங்கள் கூறியுள்ளோம்.

ஏனெனில் ஜனாதிபதி பேச்சுவார்த்தை முயற்சிகளில் ஈடுபடுவது போன்று தோற்றத்தைக் காட்டினாலும் ஜே.வி.பி. போன்ற அமைப்புக்கள் இன்றைக்கு ஆளும் கட்சியில் பங்கெடுக்கின்ற, அரசாங்கத்தில் பங்கெடுக்கின்ற கூட்டுக்கட்சிகள் என்ற வகையில் பகிரங்கமாக ஜே.வி.பியும் ஏனைய கட்சிகள் சமாதான முன்னெடுப்புக்களை எதிர்த்து வருகின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சமாதான முன்னெடுப்புக்களை ஜனாதிபதியை மட்டும் நம்பிக்கொண்டு நாங்கள் முன்னெடுக்கமுடியாது. ஆகவே அரசில் இருக்கின்ற ஏனைய கட்சிகளையும் இணைத்து ஓர் தீர்க்கமான முடிவை எடுத்து அதனை வெளிப்படுத்த வேண்டும் என்ற செய்தியை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி நோர்வே ஊடாக வலியுறுத்தி இருக்கின்றோம்.

*கேள்வி:* இந்த யோசனை தொடர்பாக அரசாங்கத்திடம் இருந்து ஏதாவது பதில் கிடைத்ததா?

*பதில்:* இல்லை.

*கேள்வி:* பலாலி விமானத் தளம் இந்தியாவின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு?

எமது நிலைப்பாடு தொடர்பாக ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கின்றோம். இந்தியா ஒருதலைப் பட்சமாக இலங்கை அரசாங்கத்தோடு தமிழர் தாயகப் பகுதியில் எந்தவிதமான ஒப்பந்தங்களைச் செய்வதை தமிழ் மக்களோ தமிழீழ விடுதலைப் புலிகளோ ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் சூழ்ச்சியானது தமிழ் மக்களுக்கும் இந்திய அரசாங்கத்தக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்துகின்ற, முரண்பாட்டை ஏற்படுத்துகின்ற யுக்தியாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். இது தொடர்பாக மக்களே தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை அவர்களுடைய நலன்களுக்கு எதிராக இந்திய மத்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்தோடு ஒருதலைப்பட்ட சமாக நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதே எங்களுடைய நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் ஆகும்.

*கேள்வி* : அரசாங்கத்திடம் இருந்து இதுவரையும் சாதகமான பதில் கிடைக்காதநிலையில், அடுதத கட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றீர்கள்?

பதில் : அனுசரணையாளர்கள் ஊடாக ஏதாவது ஒரு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்த்திருக்கின்றோம். அதுபற்றி நாம் இப்பொழுது முடிவு சொல்ல முடியாது. எதிர்காலத்தில் எமது தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் என நம்புகின்றேன்.


# மரண அறிவித்தல்

## திருமதி. சரஸ்வதி குணரத்தினம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி. சரஸ்வதி குணரத்தினம் அவர்கள் திங்கள் இரவு (15.11.2004) இந்தியாவின மைசூர் நகரில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு குணரத்தினத்தின் அன்பு மனைவியும் தேவதாசன் (பொறியியலாளர் UK) Dr. ரவிகுலதிலகம் (பெங்களூர்), ரவீந்திரன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), சரோஜினி (UK), ராதாகிருஷ்ணன் (பொறி[illegible]லாளர் UK), சிவபாலன் (பொறியியலாளர், மேலதிக மாகாணக் [illegible]விப்பணிமனை யாழ்ப்பாணம்), ஸ்ரீ ரஞ்சனி (ஜேர்மனி), இளங்[illegible] (மலேசியா), ஆகி யோரது அன்புத் தாயாரும், Dr. தேவிரொ[illegible], Dr. அர்ஜீன், கோனன் கல்லி, ஈஸ்வரி ராசிக், Dr. வசந்தமாலா, வசந்திமாலா(அதிபர்யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), ஷேர்னி, ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 16.11.2004 மைசூரில் இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்குமாகவும் அறியத்தருகின்றோம்.

தகவல்
கு.சிவபாலன் பொறியியலாளர்
மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை
யாழ்ப்பாணம்.

34, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
(C3370)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இரு வேறுபட்ட முகங்களுடன் அரசியல் நடத்தும் சந்திரிகா!

## சி. நவரத்தினத்தின் அஞ்சலி நிகழ்வில் செந்திவேல்

ஜனாதிபதி சந்திரிகா சமாதானத்துக்கு ஒரு முகத்தையும், யுத்த முனைப்புக் கோரிநிற்கும் பேரினவாதச் சக்திகளுக்கு மற்றொரு முகத்தையும் காட்டிவருகிறார். சமாதானத்துக்காகக் காட்டிவரும் முகம் பொய்முகம் என்பதாலேயே பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முடியாது காலத்தை இழுத்தடித்துச் செல்லும் தந்திரோபாயத்தைக் கையாண்டுவருகின்றார்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் மறைந்த அரசியல் குழு உறுப்பினர் சி.நவரத்தினத்தின் அஞ்சலிக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்திய, அமெரிக்க வல்லரசு ஆதிக்க சக்திகளின் முழு ஆதரவுடன் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்காதுவிடும் பேரினவாத சக்திகளின் யுத்த முனைப்புகளுக்கு தனது உண்மையான முகத்தைக் காட்டிநிற்கின்றார்.

இதனால், இரண்டரை வருடங்களைக் கடந்துநிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதன்கீழான யுத்த நிறுத்தமும் அபாயமான கட்டத்தை அடைந்து மீண்டும் யுத்தம் வெடித்துவிடுமோ என மக்கள் அஞ்ச வேண்டிய நிலையிலேயே இருந்து வருகின்றனர். இது நாட்டைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிய அவசியத்தையோ உணராது ஆளும் வர்க்க நலன்களையும், அதிகாரப் பிடியைப் பற்றியும் சிந்திக்கும் போக்கேயாகும்.

இன்று ஒருபுறம் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாது இழுபட்டுச்செல்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்குவந்து ஆறு மாதங்களாகியும் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் முன்னேறவில்லை. யுத்தமும் இல்லை, சமாதானமும் இல்லை என்ற தோரணையிலும், பேச்சு வார்த்தையும் வேண்டாம், அரசியல் தீர்வும் அவசியமற்றது என்ற பேரினவாத உள்நோக்க அடிப்படையிலேயே நிலைமைகளை இழுத்தடித்துச் செல்வதையே விரும்புகின்றனர்.

இவர்களது முழு இலக்கும் தொடர்ந்து அதிகாரக் கடிவாளத்தைக் கைகளில் வைத்திருப்பதையே நோக்காகக் கொண்டதாகும். பேச்சுவார்த்தையைத் தொடங்குமாறு வற்புறுத்திநிற்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கூட அடுத்து வர இருக்கும் ஜனாதிபதித் தேர் தலைமையமாக வைத்தே தமது காய்களை நகர்த்தி வருகின்றனர்.

மறுபக்கத்தில் மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடியும், வாழ்க்கைச் செலவும் சாதாரண மக்கள் எட்டிப்பிடிக்க முடியாதவாறு உயர்ந்து செல்கிறது. சம்பள உயர்வு என்பது வெறும் கண்துடைபபாகவே அமையப்போகிறது. இன்றைய பொருளாதார நெருக்கடியும் விலை உயர்வு, கட்டண அதிகரிப்பும் தற்செயலானவை அல்ல. கடந்த கால் நூற்றாண்டு கால தாராளமயம், தனியார் மயம், உலக மயமாதல் என்பனவற்றின் பாரிய பின் விளைவுகளாகும் என்பதை மறந்துவிடமுடியாது.

அன்று ஜே.ஆர்.தொடக்கி வைத்த தவறான பொருளாதாரக் கொள்கையைத் தான் சந்திரிகா அம்மையாரும் தொடர்ந்தார். இடையில் தம்மை மூன்றாவது சக்தி எனக் கூறிக்கொண்டு அரசியல் அரங்கிற்கு வந்த போலி இடதுசாரிகளான ஜே.வி.பியும் இன்றைய அரசியல் பங்காளியாகி தாராளமயம், தனியார் மயம், உலகமயமாகுதலுக்குப் பணிந்து நின்று மக்களுக்குப் பதில் கூறமுடியாது திண்டாடுகின்றனர். இதன் காரணமாகவே பேரினவாதக் கூச்சலைக்கிளப்பி அதன் மறைவில் தமது கேடுகெட்ட அரசியலை நடாத்திவருகின்றனர் எனத் தெரிவித்தார்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் கொழும்பு, மலையகம், வவுனியாப் பிரதேசங்களில் இருந்து வந்த கட்சியின் தலைமை உறுப்பினர்களும், அஞ்சலி உரை நிகழ்த்தினர். 'பொதுவுடமைப் போராளியின் நினைவுகள்' என்னும் நினைவு நூலும் வெளியிடப்பட்டது. 'மனிதம் மண்ணில் உயரும் வரை' என்ற கவியரங்கும் இடம்பெற்றது.

# கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய மத்திய நிலையங்கள என்பவற்றில் நிலவும் கல்விசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இந்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'மேலதிக செயலாளர், நிாவாகம், நிதி, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

காவற்காரர், சமையலாளர், இரசாயனகூட சேவகர்கள், நூலக சேவகர்கள் போன்ற பதவி வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன. (122)

# பிரபாவின் பிறந்தநாளையொட்டி கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தன்று - நெடுந்தீவில் உள்ள முன்பள்ளிச் சிறார்களுக்கு சிற்றூண்டிகளும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை அன்றையதினம் நெடுந்தீவிலுள்ள ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடாத்தப்படவுள்ளன.

தேசியத் தலைவரின் பிறந்த தினத்தன்று நெடுந்தீவில் பல நிகழ்வுகள் சிறப்புற இடம்பெறுவதற்கு அங்குள்ள பொது அமைப்புக்களும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் பெரும் ஒத்துழைப்புக்கள் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# வெள்ளநீர் தேங்கியதால் சுகாதாரச் சீர்கேடு!

யாழ்ப்பாணம் வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தெற்கு வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதால் அந்தப் பாதையூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது தொடர்ந்து பெய்துவரும் கடும்மழையால், இந்த வீதியில் நீர் தேங்கியுள்ளது. இதனால் பாதையூடாக மக்கள் பிரயாணம் செய்யமுடியாத நிலை காணபபடுகிறது.

இதேவேளை மணிக்கூட்டு வீதியில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் பெருஞ்சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டு தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது. இரவுவேளைகளில் இந்த வீதியூடாகப் பிரயாணம் செய்வோர் இந்த இடத்தில் விபத்துக்குள்ளாகும் நிலையும் காணப்படுகிறது.

# பிரபாவின் பிறந்ததினத்தை முன்னிட்டு நெடுந்தீவில் பனம்விதைகள் நடுகை!

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கடந்த 12 ஆம் திகதி நெடுந்தீவுப் பகுதியில் 2000 பனம் விதைகள் நாட்டப்பட்டன.

நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள, அரச - அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் என சுமார் 35 பேர் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவுப் பகுதியில், மாதிரிப் பனந்தோட்டம் அமைப்பதற்கென உருவாக்கப்பட்ட வளாகத்திலேயே பனம்விதைகள் நாட்டப்பட்டன. முதலாவது விதையை நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.ரங்கன் சம்பிரதாயபூர்வமாக விதைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (113)



தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையினால் வடமராட்சி பகுதியின் சில இடங்களில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதை முதற்படத்திலும், சேதமுற்று தற்காலிகமாகச் செப்பனிடப்பட்ட வல்லைப் பாலத்தினூடாக பஸ் ஒன்று பயணிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தொடரும் மழையால் நெற்செய்கை பாதிப்பு

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக தாழ்ந்த பகுதி விவசாய நிலங்கள் மழை நீரால் நிரம்பி வழிகின்றன.

மேட்டுநில நெற்செய்கை திருப்தியளிக்கின்ற போதிலும், தாழ்நில நெற்பயிர் இந்தமுறை அதிக விளைச்சலைத்தராது என விவசாயிகள் தெரிவித்தனர்.

விதைப்பு மழைபெய்து - வயல் நிலங்களைப் பண்படுத்தி, பசளையிட்டு நெல் விதைப்பதற்கு முன்பே கடும்மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. இதனால் ஆரம்பத்தில் விதைத்தவர்களின் நெல் ஓரளவு வளர்ந்துவிட்டபோதிலும், பிந்தி விதைத்தவர்களின் பயிர் முளை விடுவதற்குள் நீர் நிரம்பி விட்டதால் முளையிலேயே நீருக்குள் மூழ்கி விட்டன.

இதன் காரணமாக விவசாயிகள் செலவழித்த பணத்தைக் கூட பெற முடியாதிருப்பதோடு, அடுத்த வருடம் வைக்கோலுக்கு கூட பெரும் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை உள்ளதாக கவலை தெரிவித்தனர். (101)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : இ.மாறன்
முகவரி :அல்வாய்

### எட்டாவது அகவையில்



பெயர் : க.கிறெளதர்
முகவரி :யாழ்ப்பாணம்



பெயர் : மு.வெண்ணிலா
முகவரி : பருத்தித்துறை

# போதிய நூல்கள் இல்லாமையால் நூலகத்தைத் திறப்பதில் தாமதம்!

## பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர்

நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு போதிய நிதிவளம் இல்லாமையால், செம்பியன்பற்று பொது நூலகத்தை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொண்டர் நிறுவனங்கள் நிதியை ஒதுக்கீடு செய்யமுன்வர வேண்டுமென அவா வேண்டுகோள் விடுத்தார்.

2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெருந்தொகையான பெறுமதி வாய்ந்த நூல்களுடன் நூலகம் இயங்கிவந்தது. போர் நடவடிக்கை காரணமாக இப்போது நூலகம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேறி இரண்டரை வருடங்களுக்கு மேலாகின்றது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் நூலக வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். (122)

### நவாலி முருகமூர்த்தி ஆலயத்தில் சூரன்போர்

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு சூரன்போர் உற்சவம் வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம், சண்முக அர்ச்சனை என்பன இடம்பெறும். (101)

# நெடுந்தீவிலிருந்து கால்நடைகளை ஏற்றிக்கொண்டுவருவதற்கு தடை!

நெடுந்தீவுப் பகுதியில் இருந்து வியாபார நோக்கத்திற்காக கால்நடைகள் ஏற்றுவது, எதிர்வரும் 20 ஆம் திகதியில் இருந்து, மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளது.

கால்நடைகள் சினைப்படும் காலப்பகுதியாகையால், அவற்றை வியாபார நோக்கில் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான பொது அறிவித்தல் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (113)

# முல்லைத்தீவில் மாவீரர் நாளை முன்னிட்டு கழகங்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி

(முல்லைத்தீவு)

மாவீரர் நாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட, மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகள் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டுக்கழக மைதானத்தில், நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமைமுதல் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்ற போட்டியில், இறுதிப்போட்டி புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் அணியும், முள்ளியவளை வித்தியா விளையாட்டு கழகமும் தெரிவாகின.

இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் காலை முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கமல் தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் - பொதுச் சுடரை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய அதிபர் சிவலிங்கம் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார்.

விளையாட்டுப் போட்டியை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் சிவனடியார் மற்றும் கமல் ஆகியோர் ஆரம்பித்து வைத் தனர். இறுதிப்போட்டியில் 1:2 என்ற கோல் கணக்கில் முள்ளியவளை பத்திமா அணி வெற்றிபெற்றது.

# 'வர்ணங்கள் கரைந்த வெளி' கிளிநொச்சியில் வெளியீடு!

புலிகளின் குரல் வெளியீடான புலம்பெயர் கவிஞர் தா.பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.30 மணிக்கு புலிகளின் குரல் துணைப் பொறுப்பாளர் வி.செயல்வீரன் தலைமையில் ஆரம்பமான இந்த வெளியீட்டு விழாவில் ஈகச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றினார்.

பொதுச்சுடரை மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் மௌலியின் தாயாரும் போராளியின் தாயாருமான நீலாவதி தாமோதரம்பிள்ளை ஏற்றினார். தொடர்ந்து மாவீரர் வணக்க நடனத்தை சுகன்யா வழங்கினார்.

வரவேற்புரையை புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளரும் படைப்பாளியுமான ஆதிலட்சுமி சிவகுமார் நிகழ்த்தினார். தலைமையுரையைத் தொடர்ந்து கவிஞர் சு. வில்வரத்தினம் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் இந்த நூலை வெளியிட்டு வைத்து, சிறப்புரையை நிகழ்த்தினார்.

நூல்மதிப்பீட்டுரையை அரசியல் ஆய்வாளரும் படைப்பாளருமான நிலாந்தன் நிகழ்த்த, பதிலுரையை கவிஞர் மு.பொன்னம்பலம் நிகழ்த்தினார். நன்றியுரையை போராளி எல்லாளன் நிகழ்த்தினார். பெருமளவிலான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகள் பெரும் பற்றாக்குறையுடன் இயங்குகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் பெருஞ் சிரமங்களுடனேயே இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை போன்ற பெருஞ்சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

இங்கு 29 ஆயிரத்து 463 மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில், ஆயிரத்து 573 ஆசிரியர்கள் தேவையாகவிருந்தபோதும் 991 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர்.

இதைவிட இங்கு 637 ஆசிரியர்கள் கதிரைகளே இங்கு காணப்படுகின்றன. 688 வகுப்பறைகளில் ஆசிரியர் கதிரைகள் இல்லை. ஆயிரத்து 285 கரும்பலகைகள் தேவையான நிலையில், 743 கரும்பலகைகளே உள்ளன. 542 வகுப்பறைகளில் கரும்பலகைகள் இல்லை.

மேலும் பெரும்பாலான பாடசாலைகளில் வகுப்பறைகள் இல்லாமையால், தற்காலிக கொட்டகைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பல அவலங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படுவது அவதானிக்கமுடிகிறது.

# மன்னார் பிரதேசத்தில் தொடரும் மழையினால் மக்கள் பெரும் சிரமம்

(மன்னார்)

மன்னாரில் தொடர்ந்து பெய்து வரும் கடும்மழை காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மன்னாரின் சவுத்பார், சாந்திபுரம், எழில்நகர், பள்ளிமுனை, சாவற்கட்டு, வங்காலை, வட்டக்கண்டல் ஆகிய கிராமங்களே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.




இந்தக் கிராமங்களில் குடிசைகள் அமைத்துவாழும் மக்கள் வெள்ளம் காரணமாக பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனையடுத்து மன்னார் அரச அதிபரின் ஒழுங்குபடுத்தலில், மன்னார் நகர பிரதேச சபையினால், தரைவிரிப்புக்கள் வழங்கப்பட்டன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை மன்னாரின் கரையோரப் பகுதியான வங்காலையில் கடுங்காற்றுடன் மழை பெய்ததால், 1964 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயற்காற்று, வீசுமோ என்ற அச்சத்தால் மக்கள் தங்கள் வசதிகேற்ப மரங்களைத் தறித்து வருகின்றனர்.

இதேவேளை எச்சரிக்கை நடவடிக்கையாகக் குடிசைகளில் வாழ்வோர் பாதுகாப்பான இடங்களுக்குச்சென்று தங்குமாறு, பொது அமைப்புகள் இணைந்து ஒலி பெருக்கிமூலம் அறிவுறுத்தியதை அடுத்து, குடிசைகளில் வாழும் மக்கள் இரவுவேளைகளில் அங்கு தங்காது, பாதுகாப்பாக உள்ள உறவினர் வீடுகளில்சென்று தங்கி வருகின்றனர். மன்னாரில் பல இடங்களின் கழிப்பறைக் குழிகள் நீர்நிரம்பி வெளியே கசிவதால், குடிநீர், மாசடைந்து வருவதுடன், சுற்றுச் சூழல் சுகாதாரமும் பாதிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் - வங்காலை 100 வீட்டுத்திட்டத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும்மழையால் பாதிப்படைந்துள்ளது.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய மக்களைக் குடியமர்த்தும் நோக்கில், மன்னார் வங்காலை, அக்கினேஸ்புரத்தில் அமைக்கப்பட்ட 100 வீட்டுத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட மக்கள் அண்மை நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடியிருப்புப் பகுதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் மக்கள் குடியிருக்கமுடியாத நிலையில், இடம்பெயர்ந்து தமது உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தற்போது பெய்து வரும் மழையால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மன்னார் - பள்ளமடு, புலக்காடு கிராமத்தில் 28 வீடுகளும், விடத்தல் தீவில் 10 வீடுகளும், கூராய் சீது விநாயகர் கிராமத்தில் 10 வீடுகளும், பாலியாறு கிராமத்தில் 4 வீடுகளும், சவுரிகுளம் கிராமத்தில் 10 வீடுகளும் வெள்ளம் புகுந்துள்ளது.

இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு இந்த வெள்ளம் கிராமங்கள் பூராகப் பரவிக் காணப்படுகின்றது.

# மாவீரர் நாள் தொடர்பான துண்டுப் பிரசுரம்

மன்னார் நகரில் மாவீரர் நாள் தொடர்பான முன்னோடிச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் மாவீரர் நாளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கும் நோக்கில் மன்னார் தேசிய எழுச்சிப் பேரவையினால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையான காலத்தை புனித வாரமாக அனுஷ்க்கும் வகையில் இரத்ததானம், வீட்டுத்தரிசிப்பு, பொது இடங்களில் சிரமதானப் பணிகள் போன்றவற்றை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நான்கு பாடசாலைகள் புனரமைப்பு ஜனவரி மாதத்துக்குள் முடிவுறும்!

## நிகொட் நிறுவன உதவித் திட்டப் பணிப்பாளர் நவரட்ணராசா

போரினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை புனரமைப்பதற்கு, நிகொட் நிறுவனம் சுமார் 15 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், குறிப்பிட்ட சில வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளதாகவும் யாழ்.மாவட்ட நிகொட் நிறுவன உதவித்திட்டமிடல் பணிப்பாளர் நவரட்ணராசா தெரிவித்தார்.

நிகொட் நிறுவனம் - மீள்குடியேற்றப்பட்ட பிரதேசமான மருதங்கேணிப் பிரதேசத்தில் கிராமிய வைத்தியசாலைகளைப் புனரமைப்புச் செய்துள்ளது. மீனவர் இளைப்பாற்று மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மாமுனை - கட்டைக்காடு வீதி புனரமைப்பு முடிவுறும் நிலையில் உள்ளன. கடற்தொழில் சங்கங்களுக்கு உபகரணங்களையும் வழங்கியுள்ளது. மாமுனை - கட்டைக்காடுப் பாடசாலைகளுக்கு தளபாடங்களும் வழங்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் நான்கு பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதமளவில் கட்டடங்கள் பூர்த்தியாக்கப்பட்டுவிடும் எனவும் அவர் தெரிவித்தார். (122)

# 430 பொது மக்கள் கொல்லப்பட்டனர்

மன்னார் அடம்பன் பிரதேசத்தில் கடந்த 19 ஆண்டு காலமாக இடம்பெற்ற யுத்த அனர்த்தம் காரணமாக 430 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 1980 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அடம்பன் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் 430 அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

# கிராம வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன

ஆனைவிழுந்தான் - வன்னேரிக்குளம் கிராமவீதிகள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த வீதிகள் மணல் வீதிகளாகக் காணப்படுவதால் புனரமைத்துத்தருமாறு சம்பந்தப்பட்டவர்களைப் பலமுறை கேட்டும், இதுவரையில் குறிப்பிட்ட வீதிகள் மட்டும் புனரமைக்கப்பட்டுள்ளன. பெருமபாலான வீதிகள் இதுவரையில் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

# கால போக நெற் செய்கை பாதிப்புற்ற நிலையில்

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாகப் பெய்யும் மழையால் கால போக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

முத்தையன்கட்டு குளம் உடைப்பெடுத்துள்ளதால், கற்சிலைமடு, பெரியமடுப் பிரதேசத்தில் சுமார் 200 ஏக்கர் விவசாய நிலங்களீ நீரில் மூழ்கியுள்ளன.

அத்துடன் இந்தப்பகுதி மக்களின் குடிசைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பயன்தரும் மரங்களும் அழிவடைந்துள்ளன. இதனால் இந்தப்பகுதி மக்கள் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

## புலிகளின் குரல் 14 ஆம் ஆண்டு நிறைவு விழா

தமிழீழ வானொலி, புலிகளின் குரல் சேவையின் 14 ஆவது ஆண்டு நிறைவுநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெறவுள்ளன. இந்த விழாவையொட்டி நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச்சேவை, நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக பல இடர்களைச் சந்தித்து இன்று கிளிநொச்சியில் தனது பணியை தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது.







நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தா.பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீட்டு விழாவில தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நூலை வெளியிட்டு வைப்பதை முதற்படத்திலும், கலந்துகொண்ட பிரமுகர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.